
# வக்கீல்

205

பொதுமக்களுக்கான தமிழ் சட்டப் பத்திரிகை

15 APR 1954

205 / 2-54




ரஸமாக...

பொதுமக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கோர்ட்டு தீர்ப்புகளையும் மற்றும் பல சட்ட நுணுக்கங்களையும் எளிய தமிழ்-நடையில் விளக்கும் மாத வெளியீடு...

**THE VAKIL • TAMIL LAW MAGAZINE**

## "வக்கீல்"

**பொது மக்களுக்கான**

**உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை**

**குறிப்பு:** 'வக்கீல்" பத்திரிகை 1949 ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டது. ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் தேதியிலும் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. "வக்கீல்" பொது மக்களுக்குத் தேவையான புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய விதிகளையும் எளிய தமிழில் விளக்கம் செய்யும் ஒரு உயர்தர தமிழ் சட்டப் பத்திரிகை. வழக்கும்—தீர்ப்பும்; கேள்வி—பதில்; வரிகள்; தொழிலாளர் பகுதி போன்ற பல அம்சங்கள் உண்டு.

### ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B.A., B.L.,
,, G. நாகராஜ பத்தர், B.A., B.L.
,, V. தியாகராஜன், B.A., B.L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B.A., B.L.,
,, S. சாம்பசிவய்யர், B.A., B.L.,
,, T. S. வெங்கடராமன், B.A., B.L..
,, R. கிருஷ்ணமாச்சாரி, B.A., B.L.,
,, R. கோபாலசாமி, B.A., B.L.,
,, C. R. வீரராகவன், M.A., B.L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B.A., B.L.,
,, P. சுந்தரேசய்யர், B.A., B.L.,
,, V. S. விஜயராகவாச்சாரி B.A., B.L.,

[ஆசிரியர்]

---

## "வக்கீல்" சந்தா விபரம்

தனிப்பிரதி அணு 4. வருட சந்தா ரூ. 3. ஷை வெளிநாடு ரூ. 5. ஆயுள் சந்தா ரூ. 100.

சந்தாதார்கள் கவனிக்கவும்:—வருட சந்தாதார்களுக்கு 12 மாத இதழ்கள் அனுப்பப்படும். "வக்கீல்" பிரசுரங்கள் என்ற தனிச் சட்டப் புத்தகங்களை வருட சந்தாதார்கள் சலுகை விலையில், அதாவது அதனதன் விலையில் ரூ. 1க்கு அணு 4 தள்ளி, பெற்றுக்கொள்ளலாம். ஆயுள் சந்தாதார்களுக்கு எல்லா "வக்கீல்" இதழ்களும் எல்லாப் புத்தகங்களும், அனுப்பப்பட்டு வரும்.

சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:-

**மானேஜர் "வக்கீல்" காரியாலயம்**
**தபால் பெட்டி 26, கும்பகோணம்**
**(தென் இந்தியா)**

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

---

## "வக்கீல்"

**(விளம்பர விகிதம்)**

**ஒரு முறை பிரசுரம் செய்ய**

| | | |
|---|---|---|
| பின் அட்டை முழுப் பக்கம் (இரண்டு கலர்) | ரூ. | 100 |
| உள் அட்டை முழுப் பக்கம் | ரூ. | 80 |
| உள் பக்கம் முழுப் பக்கம் | ரூ. | 60 |
| ஷை ... அரைப் பக்கம் | ரூ. | 35 |
| ஷை ... கால் பக்கம் | ரூ. | 20 |
| ஒரு காலம் - அங்குலம் | ரூ. | 5 |

(தொடர்ச்சியாக 12 இதழ்களில் விளம்பரம் செய்ய 10% குறைக்கப்படும்.)

---

# தமிழில் சட்டப் புத்தகங்கள்

"வக்கீல்" பிரசுரங்கள்

**"வக்கீல்" 1953-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை 12 இதழ்கள் செட் ஒன்று விலை ரூ 3 12 0

**"வக்கீல்" 1952-ம் வருடம்** ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள இதழ்கள் பொருள் அட்டவணையுடன் பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 5 8 0

**"வக்கீல்" 1951-ம் வருடம்** பைண்டு செய்யப்பட்ட செட் ஒன்று விலை ரூ. 4 0 0

**சென்னை விவசாயிகள் கடன் நிவாரணச் சட்டம்** [ஒத்திப் பற்றிய புதிய திருத்தம் உள்பட விளக்கம்] ரூ. 1 4 0

**தஞ்சை சாகுபடிதார் பண்ணையாள் பாதுகாப்புச் சட்டம்** [புதிய சட்டம், விதிகள், நமூனுக்கள், குத்தகைப் பத்திர நமூனு, வார சாகுபடிப் பத்திர நமூனு உள்பட விளக்கம்] ரூ. 0 6 0

**சரக்கு விற்பனைச் சட்டம்** [The Indian Sale of Goods Act] ரூ. 1 8 0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்

**வி. பி. பி. கிடையாது.**

அணு 8 சேர்த்து அனுப்பினால் ரிஜிஸ்டர் தபால் மூலம் அனுப்பப்படும்.

கீழேகண்ட விலாசத்திற்குத் தேவையான பிரதிகளுக்கு M. O. செய்யவும்:—

**மானேஜர்,**
"வக்கீல்" காரியாலயம்,
**தபால் பெட்டி 26 :: கும்பகோணம்**(S.I)

நாகரீக நூதன பார்டர்களில் கண்ணைக் கவரும் மனோகரமான வேலைப்பாடுள்ள

**பட்டு ஜவுளி தினுசுகள்**

குறைந்த விலையில் கியாரண்டியுடன் கிடைக்குமிடம்:

**ராணி ரெங்கய்யர் சன்ஸ்**

**கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்**

கெருடலாயத் தெரு,

**கும்பகோணம்.**

பிராஞ்சு:

20, லக்ஷிமிபுரம் 2-வது தெரு,

**மதுரை.**

**1006 மங்கி மார்க்**

**2066 ஸ்ரீ ஹனுமான் மார்க்**

சுத்தமான சீயக்காய்த்தூள் பாக்கெட்டுகள்

**கிருஷ்ண விலாஸ்**

**உதயகிரி விலாஸ்**

வாசனை சீயக்காய்தூள்

எண்ணெய் குளிப்பதற்கு மிகச் சிறந்தவைகள்

தயாரிப்பவர்:—

**கிருஷ்ணா விலாஸ்**

336, கீழ மாசிவீதி, மதுரை.

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

**M. ஏகாம்பரம் செட்டியார்,**

புரோப்ரைட்டர்.

ஆடைகளை அழகு பெறச் செய்வது

★ **அன்னகிளி** ★

**சோப்**

— தயாரிப்பவர் —

**சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்**

**P. B. No. 22 :: தஞ்சாவூர்.**

# வக்கீல்

## பொருள் அடக்கம்

மலர் 6 — மார்ச் 1954 — இதழ் 3

15 APR 1954


காங்கிரசின் சரிவு 3

புதிய வரிகள் 4

ஜில்லா போர்டுகள் 4

புதிய சட்டங்கள் 5

சர்க்கார் அறிக்கைகள் 7

வரிகள் 8

வழக்கும் - தீர்ப்பும்

* மைனருடைய சொத்துக்களைக் கார்டியன் கிரயம் செய்தார். மைனர் இறந்த பிறகு, கிரயம் செல்லாதென மைனருடைய வார்சு தாவா செய்தார். காலாவதி என்ன? 11

* பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் சொந்த மார்க்கெட்டுகளை மூடுவது பற்றிய பஞ்சாயத்துச் சட்ட ஷரத்து செல்லாது – சென்னை ஹைகோர்ட்டாரின் தீர்ப்பு. 12

தொழிற்சாலைச் சட்டம் 13

கேள்வியும் – பதிலும் 19

## "வக்கீல்" பிரசுரத் தேதி

"வக்கீல்" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் தேதியிலேயே பிரசுரம் செய்யப்பட்டு வந்தாலும், போன மாதம், அதாவது 1954 பிப்ரவரி மாத இதழ் அவ்விதம் பிரசுரம் செய்யப்படவில்லை. ஏனென்றால் கடன் ஒத்திவைப்புச் சட்டம் என்ற சென்னைக் கடன் பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டமானது சட்டசபையால் ஜனவரி மாதமே 'பாஸ்' செய்யப்பட்டு விட்டாலும், ஜனாதிபதி அவர்கள் அச்சட்டத்திற்குப் பிப்ரவரி மாதம் 5-ஆம் தேதியில் தான் அங்கிகாரம் அளித்தனர். அதற்குப் பின்பு தான் அச்சட்டம் சர்க்கார் கெஜட்டிலேயே பிரசுரம் செய்யப்பட்டது. இதற்கு முன் இருந்த அவசரச் சட்டத்திற்கும், இச் சட்டசபைச் சட்டத்திற்கும் சில முக்கிய அம்சங்களில் வித்தியாசங்கள் இருந்தபடியால், அச் சட்டத்தையும் பிப்ரவரி இதழிலேயே விளக்கம் செய்யும் பொருட்டு, "வக்கீல்" பிப்ரவரி மாதம் இரண்டாவது வாரத்தில் தான் பிரசுரம் செய்யப்பட்டது. சில நாட்கள் தாமத மேற்பட்டாலும், முக்கிய விஷயங்களை இன்னும் அதிக காலதாமதமின்றி நமது நேயர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வரும் பொருட்டே அவ்விதம் செய்தோம். "வக்கீல்" பத்திரிகை ஒரு குறிப்பிட்ட நோக்கத்துடன் வெளியிடப் பட்டு வருவதால் விஷயத்தை ஒட்டி ஏற்படும் காலதாமதத்தை "வக்கீல்" அன்பர்கள் பொருட்படுத்த மாட்டார்களென நம்புகிறோம். அதற்குள் "வக்கீல்" ஏன் வரவில்லை என்று கடிதம் எழுதிய நேயர்களுக்கு இக் காரணத்தைக் கண்டுத் தனித் தனி பதில் காகிதம் போட இயலாமல் போயிற்று. மன்னிக்கவும்.

பார்லிமெண்ட் சபையும் சட்ட சபைகளும் கூடி இருக்கும் இம் மாதங்களில் அவசியமானால், "வக்கீல்" நாலைந்து நாட்கள் தாமதமாக பிரசுரம் செய்ய நேரிடும். எப்படியும் ஒவ்வொரு ஆங்கில மாதமும் முதல் வாரத்திற்குள் "வக்கீல்" கட்டாயமாக வெளிவரும்.

## "வக்கீல்" ஏஜண்டுகள் கவனிக்கவும்

ஏஜன்சி நிபந்தனைகளின்படி அந்தந்த மாதம் 25 தேதிக்குள் பில் தொகை அனுப்பும் ஏஜண்டுகளுக்குத் தேவையான பிரதிகளை மட்டில் கணக்குச் செய்து அச்சடிக்கப்படுகிற படியால், தயவு செய்து அந்தந்த மாத பில் தொகையை அம்மாதம் 25 தேதிக்குள் அனுப்பும்படி "வக்கீல்" ஏஜண்டுகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். அவ்விதம் தொகை அனுப்பும் ஏஜண்டுகளுக்குத் தான் "வக்கீல்" பிரசுரமாகும் தேதியிலேயே பிரதிகள் அனுப்புவது சாத்தியமாகும். கால தாமதமாக தொகை அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மறுபதிப்புப் போட்ட பிறகு தான் பிரதிகள் அனுப்ப முடியும்.


உ

ஸ்ரீ மகாலெக்ஷிமி துணை

திருக்காட்டுப்பள்ளியில்

பஸ் ஸ்டாண்டுக்குச் சமீபத்திலுள்ள

ஸ்ரீ திருச்சி கபே

ஹோட்டலில் கை தேர்ந்த பிராமணர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட ருசிகரமான இனிப்பு பக்ஷணங்களும் இனிமையான குளிர்ந்த பானங்களும் கிடைக்கும். டீ பார்டி, டின்னர் பார்ட்டிகளுக்கு ஆர்டரின் பேரில் குறித்த காலத்தில் சப்ளை செய்யப்படும். ஒருமுறை விஜயம் செய்யவும்.





வாசன்ஸ்

வாசனைப்பாக்குத்தூள்

மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்

தயாரிப்பவர்கள் :-

சிவகாமி & CO.

360. மேலமாசி வீதி, மதுரை.



ராஜாபார்லி பிஸ்கட்ஸ்

குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்.

ஸ்தாபிதம் 1926

ரிஜிஸ்டர் நெ. 143106

# வக்கீல்

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

மலர் 6 | மார்சு 1954 | இதழ் 3

187729

## காங்கிரசின் சரிவு

இந்தியக் குடியரசின் முதல் பொதுத் தேர்தல் 1952ல் நடந்தது. சர்வஜன வாக்கினால் அப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட பார்லிமெண்டும், ராஜ்ய சட்ட சபைகளும் சாதாரணமாக ஐந்து வருடங்கள் நீடித்திருக்க வேண்டியது. அக்கெடுவுக்கு முன்பும் அவை கலைக்கப் படலாம். திருவாங்கூர்–கொச்சி ராஜ்யத்தின் சட்ட சபையானது அப்படித்தான் கெடுவுக்கு முன்பே கலைக்கப்பட்டு விட்டது. ஏனென்றால் அச்சட்ட சபையில் அரசாங்கப் பொறுப்பு ஏற்றுக் கொண்டு சர்க்காரை நடத்தி வந்த காங்கிரஸ் கட்சிக்குப் பலம் குறைந்து விட்டது. சட்ட சபையின் பெரும்பான்மை அங்கத்தினர்கள் சர்க்காரின் திட்டங்களை அங்கீகரிக்காவிட்டால் எப்படி ஜனநாயக அரசாங்கம் நடக்க முடியும்? ஆகையால் காங்கிரஸ் சர்க்கார் ராஜீனமா செய்தனர். வேறு எந்தக் கட்சிக்கும் தனியாக பெரும்பான்மை பலம் இல்லை. ஆகவே அச்சட்ட சபையே கலைக்கப்பட்டது. மறுபடியும் திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்தில் ஒரு பொதுத் தேர்தல் இப்பொழுது தான் நடந்து முடிந்தது "உங்களுக்கு எந்தக் கட்சி வேண்டும்–காங்கிரஸ் கட்சியா, கம்யூனிஸ்டுக்கட்சியா, அல்லது வேறு கட்சிகளா" என்று திருவாங்கூர் கொச்சி மக்கள் கேட்கப்பட்டனர் இந்தியாவில் படித்த மக்கள் அதிகமாக இருக்கும் ராஜ்யம் திருவாங்கூர் கொச்சி தான். இந்தியாவிலுள்ள முக்கிய கட்சிகள் எல்லாம் திருவாங்கூர் கொச்சித் தேர்தலையே தங்கள் பலாபலச் சோதனைக் கூடமாகக் கருதினர். காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியத் தலைவர்கள் திருவாங்கூர் சென்று மக்களை வேண்டிக் கொண்டனர். டில்லியிலிருந்து நேரு திருவாங்கூர் சென்றார். வெளி ராஜ்ய முதல் மந்திரிகள் சென்னையிலிந்து ராஜாஜியும் பாம்பாயிலிருந்து தேசாயும் அங்கே காங்கிரசுக்காகப் பிரசாரம் செய்தனர். தேர்தலின் விளைவு என்ன! காங்கிரஸ் படு தோல்வி அடைந்தது. ஏன்? திருவாங்கூர் கொச்சி மக்கள் படித்தவர்களாயிற்றே!, பகுத்தறிவு அதிகமுள்ளவர்களாயிற்றே! ஏன் அங்கே காங்கிரஸ் கட்சி தோற்றது? இதற்குப் பதில் ஒன்று தான். முன்பு தியாகத்தீயில் குதித்த காங்கிரசுக்கும் இன்று சர்க்கார் நடத்தும் காங்கிரசுக்கும் பெயர் தவிர வேறு சம்ப்ந்தம் ஒன்றுமில்லை. பெயர், ஒன்றே ஒழிய அது வேறு, இது வேறு. இவ்விஷயம் நேரு போன்ற தலைவர்களுக்குப் புரிந்தாலும் அவர்களும் இச்சுழலில் மாட்டிக் கொண்டு வெளிவர முடியாமல் தவிக்கின்றனர். இன்று மகாத்மாஜி உயிருடனிருந்திருந்தால், காங்கிரஸ் கட்சியானது கலைக்கப்பட்டு வெகு நாட்களாகி இருக்கும். திருவாங்கூர் கொச்சியே இந்தியாவின் குரலானால், நம்மை ஆள வேண்டிய கட்சி எது?

## ஜில்லா போர்டுகள்

திடீரென்று சென்னை சர்க்காருக்கும் சரி, ஆந்திர சர்க்காருக்கும் சரி இந்த ஜில்லா போர்டுகளைக் கண்டால் பிடிக்க வில்லை. ஜில்லா போர்டுகளை அடியோடு ஒழித்து விட்டு கீழே கிராம பஞ்சாயத்துக் களும் மேலே ராஜ்ய சர்க்காரும் இருந் தால் போது மென்று ஆந்திர சர்க்கார் தீர்மானித் துள்ளனர். சென்னை சர்க் காரும் ஜில்லா போர்டுகளை ஒழித்து விட வேண்டுமெனத்தான் கருதுகின்றனர்; ஆனால் தாலூக்கா போர்டுகளை மறுபடி யும் அமைக்க வேண்டுமென இவர்கள் உத்தேசிக்கின்றனர். ஜில்லா போர்டு களாலோ, தாலூக்கா போர்டுகளாலோ மக்களுக்கு உருப்படியான உபயோகம் ஒன்றுமில்லை. இப்போது சென்னை ராஜ்யமானது சிற்றடக்கமானது. அதிக ஜில்லாக்கள் இல்லை. ஜில்லா போர்டுகள் கவனித்து வந்த அலுவல்களை ராஜ்ய சர்க் காரே நேரடியாக கவனித்து வர, வசதி யும் அவகாசமும் இருக்கின்றன. மேலும் பொதுத் தேர்தலில் எவ்வளவு பொதுப் பணச் செலவும் தொல்லைகளும் இருக்கின் றனவோ அதைப் போலவே ஜில்லா போர்டு தாலூக்கா போர்டு தேர்தல் களிலும் இருக்கின்றன. உபயோக மற்ற இப் போர்டுகளை அடியுடன் எடுத்து விடு வதால், மக்களுக்கு நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனால் கட்சித் தலைவர்கள் அவ்விதம் நினைக்க மாட்டார்கள்!

## புதிய வரிகள்.

ஒவ்வொரு வருடமும் பிப்ரவரி மார்ச்சு மாதங்களில்தான் இந்திய சர்க்காரும் சரி, அந்தந்த ராஜ்ய சர்க்கார்களும் சரி, அடுத்து வரும் ஏப்ரல் முதல் தேதி முதல் ஆரம்பமாகும் நிதி வருடத்தில் தாங்கள் எதிர்பார்க்கும் வருமானத்தைப் பற்றியும், தாங்கள் செலவு செய்ய உத்தேசித்திருக் கும் செலவு இனங்களைப் பற்றியும் ஒரு வரவு செலவு திட்டம் தயார் செய்து அதை மத்திய சர்க்கார் பார்லிமெண்டு சபையிலும் சென்னை முதலிய ராஜ்ய சர்க் கார்கள் அவரவர்களின் ராஜ்ய சட்ட சபைகளிலும் சமர்ப்பிப் பார்கள். வரவை விட செலவு அதிகமாகச் செய்ய வேண்டி யிருந்தால் எந்த சர்க்காரும் அதற்காகச் செலவைக் குறைத்துக் கொள்ள மாட்டார் கள். அதிக மாகத் தேவையுள்ள பணத் தை மக்களிடமிருந்து வரிகள் மூலம் வசூல் செய்து விடுவார்கள். அதுவும் போதாவிட் டாலும் சர்க்கார் பணத்திற்குத் திண்டாட மாட்டார்கள். அவர்களுக்கு வேறு பல வழிகள் இருக்கின்றன. சர்க்காரே வட்டிக் குக் கடன் வாங்கலாம். அதுகூடத் தேவை யில்லை. வேண்டிய தொகைக்கு அவர் களே 'கரன்சி நோட்' அச்சடித்துக் கொள்ளுவார்கள். இதை 'டிபிசிட் பைனுன்சிங்' என்ற அலங்காரச் சொல் லால் குறுப்பிடுவார்கள்.

இவ்வருடம் நமது சென்னை சர்க்காரின் வரவு செலவு திட்டத்தில் சுமார் 58 லக்ஷ ரூபாய் துண்டு விழுகின்றது. இதில் புதிய வரிகள் மூலம் 40 லக்ஷ ரூபாய் வந்து விடு மென எதிர்பார்த்துச் சென்னை சர்கார் சில புதுவரிகள் விதிக்க உத்தேசித்திருக்கின் றனர். இவ்வரிகளாவன:—(1) ரூ. 500க்கு மேல் கிஸ்தி செலுத்தும் மிராசுதார் களுக்கு கிஸ்தியின் பேரில் ஒரு 'சர்சார்ஜ்' என்ற அதிகவரி. ரூ. 500க்குள் கிஸ்தி செலுத்துகிறவர்களுக்கு இந்த அதிகவரி கிடையாது. ரூ. 500க்கு மேல் கிஸ்தி செலுத்துகிறவர்கள், முதல் ரூ. 250க்கு ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை. ரூ. 250முதல் ரூ. 500 வரை ரூ. 1க்கு அணு 2 வீதம்; ரூ. 500க்கு மேல் ரூ. 1000 வரை ரூ. 1 க்கு அணு 4ம்; ரூ. 1000க்கு மேல் ரூ. 1க்கு அணு 8வீதம் 'சர்சார்ஜ்' விதிக்கப்படும். (2) தேயிலை, காபி, ரப்பர், ஏலக்காய் தோட்டங்களுக்கு மேற்கண்ட சர்சார்ஜுக்குப்பதிலாக ஒரு விவசாய வரு மான.வரி விதிக்கப்படும். (3) சர்க்காரால் 1-1-1947 க்குப் பின்பு கட்டப்பட்ட நீர்ப் பாசனத் திட்டங்களால் நில விலை உயர்வை அடைந்தவர்கள், அவ்விலை உயர்வின் மீது ஒரு வரி கொடுக்கவேண்டும். (4)கோர்ட்பீசு

கட்டண மாறுதல்கள் (5) தங்கம், வெள்ளி, நவரத்தினம் முதலிய சாமன்களின் விற்பனைக்கு சாதாரண விற்பனை வரி தவிர ஒரே கட்டத்தில் இன்னும் ஒரு அதிக வரி. (6) மில்ஜவுளிக்கு இப்போதிருக்கும் விற்பனைவரி தவிர ஒருகட்டத்தில் ரூ. 1க்கு ரூ. 0-1-3 வீதம் இன்னும் ஒரு அதிக விற்பனைவரி. இவ்வரிகளை விதிக்கும் மசோதாக்கள் சென்னைச் சட்டசபையால் அங்கிகரிக்கப்பட்ட பிறகு அவை சட்டமாகும். மத்திய சர்க்கார் சம்பந்தப்பட்டவரையில் இவ்வருடம் வருமான வரி (இன்கம் டாக்ஸ்) விகிதங்கள் முன்பு இருந்தபடியேதான் இருக்கும்; மாறுதல்கள் இல்லை. அடுத்த "வக்கீல்" இதழ்களில் இச் சட்டங்களை நேயர்கள் எதிர்பார்க்கலாம்

# புதிய சட்டங்கள்

சுருக்கியும் - வரிசையாகவும்

## 1953-ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப்பட்டவை. முதலில் இருக்கும் எண், அவ்வருடத்திய எத்தனையாவது சட்டம் என்பதைக் குறிக்கும். பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனாதிபதி அவர்களால் அச்சட்டத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன. வரிசையில் விட்டுப்போன சட்டங்களும், பிரசுரமானவுடன் "வக்கீல்" பிந்திய இதழ்களில் விளக்கப்படும்.]

53. தந்திக் கம்பிகளைச் சட்ட விரோதமாக வைத்திருப்பது பற்றிய சட்டத்திருத்தம். Telegraph Wires—unlawful possession—Amendment Act—1953 (30-12-1953.) சர்க்காருக்குச் சொந்தமான தந்திக் கம்பிகளைச் சட்ட விரோதமாக வைத்திருப்பதைக் குற்றமாக்கும் 1950-ஆம் வருடத்திய 74-வது மத்தியச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் திருத்தப்பட்டிருக்கின்றன. புதிய செக்ஷன் 4 A-ன்படி இத்திருத்தச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 30-12-1953க்குப் பிறகு எவரும் இதற்காக நியமிக்கப்படும் அதிகாரியின் அனுமதியின்றி தந்திக் கம்பிகளை விற்பதும் வாங்குவதும் குற்றமாகும். அனுமதி கொடுக்கவேண்டிய அதிகாரிகள் யார் யார் என்பதைப்பற்றி விதிகள் ஏற்படும்.

54. ரிசர்வ் பாங்குச் சட்டத் திருத்தம். The Reserve Bank of India Amendment and Miscelleneous Provisions Act 1953. (30-12-1953.) இந்திய ரிசர்வ் பாங்குச் சட்டத்தில் சில திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. ரூ. 500, ரூ. 1000, ரூ. 10000 கரன்சி நோட்டுக்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு செல்லாதென்று 1946ல் ஒரு அவசரச்

குணமில்லையென்று நிரூபிப்பவருக்கு மருந்து தொகையுடன் ரூ. 100 இனாம்.

இளம்பிள்ளை வாதம்

நீடித்ததற்கும் உத்தரவாத சிகிச்சை
இளம்பிள்ளை வாதம்-பட்சவாதம் ஒன்றே

ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 25

குஷ்டம்:-கண் சிவந்திருத்தல், மூக்கு திறந்திருத்தல், அதிக வியர்வை இவைகள் இல்லாதது சிகிச்சைக்கு உத்தரவாதம்.

ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 20.

யானைக்கால்:-சதை கெட்டிப்படாது தளதளப்போடு சுமார் 3 வருடத்திற்கு மேற்படாதது சிகிச்சைக்கு உத்தரவாதம்.

ஒரு முறை 10 நாள் மருந்து ரூ. 15.

உபயோகிக்கும் முறை மருந்துடன் நற்சாட்சி தேவைக்கு, சுமார் 25 வருஷம் அனுபவம். ஆர்டருடன் அட்வான்ஸ் ரூ. 2. தேவை. வெளிநாடுகளுக்கு மருந்துக்கு முன் பணமும் தபால் சார்ஜ் ரூ. 2 ம் சேர்த்து முன் பணம் அனுப்பவேண்டும்.

M. R. ராஜகோபால் பிள்ளை R.M.P.
மன்னப்பிள்ளைத் தெரு, மன்னார்குடி.

சட்டம் பிறப்பிக்கப்பட்டது. ஆனல் இத்திருத்தச் சட்டம். அமுலுக்கு வந்த பிறகு, அதாவது 30-12-1953க்குப் பிறகு வெளிவிடப்படும் மேற்கண்ட உயர்ந்த மதிப்புள்ள நோட்டுகளுக்கு அந்த அவசரச் சட்ட ஷரத்துக்கள் பொருந்தா என்று இச்சட்டத்தில் ஒரு ஷரத்து சேர்க்கப்பட்டிருக்கிறது. 13-1-1946க்கு முன் ரிசர்வு பாங்கியால் வெளியிடப்பட்ட ரூ. 500, ரூ, 10,000 கரன்சி நோட்டுக்களுக்குச் செலாவணி இல்லை என்றும் அந்த ஷரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

35. இந்திய கற்பனை உரிமைச் சட்டத் திருத்தம். Indian patents and Designs Amendment Act 1953.

## 1954-ஆம் வருடத்திய மத்திய சட்டங்கள்.

1. பார்லிமெண்ட் அங்கத்தினர் யோக்கியதாம்ச விதி விலக்குச் சட்டம். Prevention of Disqualification—Parliament and states Legislatures — Act 1953. (1-1-1954) சர்க்காரால் நியமிக்கப்படும் கமிட்டித் தலைவர்கள், அங்கத்தினர்கள், சர்வகலாசாலைகளின் உப அத்தியட்சகர்கள், பார்லிமெண்டின் டிப்டி சிப் விப், 'நாஷனல் கேடட்கோர்' அல்லது 'டெரிடொரியல் ஆர்மி' உத்தியோகஸ்தர்கள்— இவர்கள் பார்லிமெண்டில் அங்கத்தினர் பதவி வகிக்கத் தடையில்லை என்று விதி விலக்கு அளிக்கும் சட்டம்.

2. கண்ட்டோன்மெண்ட் சட்டத் திருத்தம். Cantonments Amentment Act 1953. (2-1-1954)

3. புராதன சரித்திரச் சின்னங்களையும் இடங்களையும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்தவையாகப் பிரகடனம் செய்யும் சட்டத் திருத்தம். Historical Monuments and Archaelogical sites and Remains-Declaration of National Importance Amendment Act 1953 (2-1-1954.) இவ்விஷயம் சம்பந்தமான 1951-ம் வருடத்திய 80-வது மத்திய சட்டத்தின் ஜாப்தாவில் இன்னும் பல புதிய இடங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சென்னை ராஜ்யத்தில், தஞ்சை ஜில்லா, சத்திரம் தாராசுரத்திலிருக்கும் ஐராவதரேசுவரர் கோயிலும்; திருச்சி ஜில்லா பேரிலிலுள்ள புராதன சமாதிகளும்; செங்கல்பட்டு ஜில்லாவில் பெரிய காஞ்சிபுரத்திலுள்ள ஐராவதரேசுவரர் கோயிலும் புராதனச் சின்னங்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

## 1954-ஆம் வருடத்திய சென்னைச் சட்டங்கள்.

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

1. சென்னை பொது விற்பனை வரிச் சட்டத் திருத்தம். The Madras General Sales Tax Amnendment Act 1954.(3-2-1954.) விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 2A திருத்தப்பட்டிருக்கிறது. அப்பீல் டிரிபுனலின் மூன்று அங்கத்தினர்களும் சேர்ந்து அப்பீல்களை விசாரித்தாலும் விசாரிக்கலாம்; அல்லது அதன் அக்கிராசனரால் குறிப்பிடப்படும் இரண்டு அங்கத்தினர்கள் மட்டில் சேர்ந்தும் ஒரு அப்பீலை விசாரிக்கலாமென்றும்; ஒரு அங்கத்தினருடைய ஸ்தானம் காலியாக இருந்தாலும், அக்கிராசனரும் மற்ற அங்கத்தினரும் சேர்ந்தும் அப்பீல்களை விசாரிக்கலாமென்று செக்ஷன் 2A திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. மூன்று அங்கத்தினர்களும் சேர்ந்து ஒரு அப்பீலை விசாரித்தால், பெரும்பான்மை அங்கத்தினர்கள் எவ்விதம் அபிப்பிராயப்படுகின்றனரோ அதுதான் தீர்ப்பாகும். இரண்டு அங்கத்தினர்கள் மட்டில் ஒரு அப்பீலை விசாரித்து இருவருக்கும் அபிப்பிராய பேதம் இருந்தால், அப்பீல் தள்ளுபடி செய்யப்படும். 1953ஆம் வருடத்திய 3ஆவது அவசரச் சட்டமானது இத்திருத்தச் சட்டத்தால் ரத்து செய்யப்பட்டுள்ளது.

2. சென்னை எதிர்பாராச் செலவு நிதிச் சட்டம். The Madras Contingency Fund Act.



# சர்க்கார் அறிக்கைகள்

**சென்னைக் கடன் பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்ட விதிகள்.**

விவசாயிகள் கடன் ஒத்திவைப்புச் சட்டத்தின் 7-வது செக்ஷனில் கண்ட அதிகாரங்களை உபயோகித்து சென்னை சர்க்கார் கீழே கண்ட படி விதிகள் இயற்றி இருக்கின்றனர். அதாவது 1951—52; 1952—53; 1953—54 இந்த வருடங்களில் வருமான வரி (இன்கம் டாக்ஸ்) விதிக்கப் பட்டவர்களுக்கு நிலபாத்தியங்கள் இருந்தும் அவர்கள் இச்சட்டப்படி 'விவசாயிகள்' ஆகமாட்டார்கள். கடன் கொடுத்தவர்கள் அவர்கள் மீது தாவா செய்ய இச்சட்டத்தால் தடை ஒன்றுமில்லை. கடன் கொடுத்தவர் ஜில்லா கலெக்டருக்கு மனுப்போட்டு இவ்விஷயத்தை, அதாவது தமக்குக் கடன் கொடுக்க வேண்டிய நபர் மேலே கண்ட வருடங்களில் வருமானவரி விதிக்கப்பட்டிருக்கிறா என்பதை தெறிந்து கொள்ளலாமென சர்க்கார் இப்போது விதிகள் இயற்றி இருக்கின்றனர். கடன் வாங்கியவர் எந்த ஜில்லாவில் வருமான வரி விதிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறதோ அந்த ஜில்லா கலெக்டருக்கு மனுப் போடவேண்டும். மனுவுக்குக் கோர்ட் பீசு ஸ்டாம்பு அணா 12 ஒட்டவேண்டும். மனுதாருடைய பெயரும் விலாசமும், கடன் கொடுக்க வேண்டியவருடைய பெயரும் விலாசமும், மற்ற விவரங்களும் தெளிவாக மனுவில் எழுதப்படவேண்டும். மனுவில் மனுதார் கையெழுத்துப் போட்டு உறுதி மொழிக் கையெழுத்தும் போடவேண்டும். மனுவில் கண்ட விஷயங்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொண்டு கலெக்டர் மனுதாருக்கு ஒரு அத்தாட்சி அனுப்புவார். அதைக் கோர்ட்டில் தாகல் செய்யலாம்-என்று விதிகள் இயற்றப் பட்டிருக்கின்றன.

(24–2–1954 சென்னை சர்க்கார் கெஜட்-ரூல் சப்ளிமெண்ட்—பாகம் I—78.)

**ஜில்லா போர்டு தேர்தல் விதிகள்**

1932ல் ஏற்பட்ட ஜில்லா போர்டு தேர்தல் விதிகளை ரத்துசெய்து புதிய விதிகள் இயற்ற சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். நகல் விதிகள் 25—2—1954 சென்னை சர்க்கார் கெஜட் பாகம் IA விசேஷ வெளியீட்டில் பிரசுரம் செய்யப்பட் டிருக்கின்றன. ஆட்சேபனை அல்லது ஆலோசனை சொல்ல விரும்புகின்றவர்கள் 6 வாரத்திற்குள் சென்னை சர்க்கார், ஸ்தலஸ்தாபன இலாகா காரியதரிசிக்குத் தெரிவிக்கலாம்.



# விற்பனை வரியும் வெளி ராஜ்ய வியாபாரமும். சுப்ரீம்கோர்ட்டாரின் தீர்ப்பு. அதை ஒட்டி மத்திய சர்க்காரின் அறிக்கை.

நமது அரசியல் அமைப்புச் சட்டப்படி சமாசாரப் பத்திரிகைகள் தவிர, மற்ற சரக்குகளுக்கு விற்பனை வரிவிதிக்கும் அதிகாரமானது அந்தந்த ராஜ்ய அரசாங்கங்களுக்கே கொடுக்கப்பட்டிருக்கிறது. (அரசியல் அமைப்புச் சட்டம் ஆர்டிகில் 246 (3) ஷிடியூல் 7, ராஜ்ய ஜாப்தா 54) ஆனால் மூன்று சந்தர்ப்பங்களில் எந்த ராஜ்ய அரசாங்கமும் விற்பனை வரி விதிக்கக் கூடாதென்றும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 286 என்ற ஷரத்தால் ஒரு தடையும் விதிக்கப்பட்டிருக்கிறது. அவை யாவன:—(1) பண்டங்களை விற்பதோ வாங்குவதோ அந்த ராஜ்யத்திற்கு வெளியே நடைபெற்றாலும் (2) இந்தியாவிற்குள் பண்டங்களை இறக்குமதி செய்கையிலோ அல்லது இந்தியாவுக்கு வெளியே பண்டங்களை ஏற்றுமதி செய்கையிலேயோ விற்பனை அல்லது வாங்குதல் நடைபெற்றாலும் (3) ராஜ்யங்களிடையே (அதாவது இந்தியாவிற்குள் இருக்கும் ஒரு ராஜ்யத்திற்கும் மற்றொரு ராஜ்யத்திற்குமிடையே) நடைபெறும் வியாபாரம் அல்லது வர்த்தகத்தில் விற்பனை அல்லது வாங்குதல் ஏற்பட்டாலும்—இம்மூன்று சந்தர்ப்பங்களிலும் எந்த ராஜ்ய அரசாங்கமும் விற்பனை வரி விதிக்கக் கூடாதென்று இருக்கிறது.

## வரிகள்

ஒரு குறிப்பிட்ட விற்பனையானது எந்த ராஜ்யத்தில் ஏற்பட்டதென்று கண்டு பிடித்தால் தான் அந்தந்த ராஜ்ய எல்லைக்குள் ஏற்படும் விற்பனைகளுக்கு அந்த ராஜ்யமானது விற்பனை வரி விதிக்க முடியும். விற்பனை என்பதில் பல அம்சங்கள் இருக்கலாம். விற்பனை ஒப்பந்தம் ஒரு ராஜ்யத்தில் ஏற்பட்டிருக்கலாம்; சரக்குகளின் சட்டபூர்வமான பாத்தியம வேறு ராஜ்யத்திற்குள் ஏற்பட்டிருக்கலாம்; சரக்கை ஒப்படைப்பது ஒரு ராஜ்யத்திற்குள் ஏற்படலாம். விற்பனை ஏற்பட்டது எந்த ராஜ்யத்திற்குள்? இச்சந்தேகத்தை அரசியல் அமைப்புச் சட்டமே விளக்கம் செய்திருக்கிறது. விற்பனை ஒப்பந்தம், பாத்தியம் மாறுதல் போன்ற விஷயங்கள் எங்கே ஏற்பட்டிருந்தாலும் எந்த ராஜ்ய எல்லைக்குள் செலவாகும் பொருட்டு அந்த ராஜ்யத்திலேயே பண்டங்கள் ஒப்படைக்கப்படுகின்றனவோ அந்த ராஜ்யத்தில் தான் விற்பனை ஏற்பட்டதாகப் பாவிக்கவேண்டும் என்று இருக்கிறது. (அரசியல் அமைப்புச் சட்டம் ஆர்டிகிள் 286 (1) விளக்கம்.)

இந்த ஷரத்தை அர்த்தம் செய்து சுப்ரீம் கோர்ட்டார் 30—3—1953ல் ஒரு தீர்ப்பு அளித்தனர். இத் தீர்ப்பானது பம்பாய் அரசாங்கத்திற்கும் யுனைடெட் மோட்டார்ஸ் முதலிய சில மோட்டார் கம்பெனிகளுக்குமிடையே ஏற்பட்ட வழக்கில் அளிக்கப்பட்டது. (1953 (1) மதராஸ் லா ஜர்னல்–743 பார்க்கவும்.)

இத் தீர்ப்பின்படி வெளி ராஜ்யங்களிலிருந்து ஒரு ராஜ்யத்திற்குள் சரக்கு அல்லது பண்டங்கள் ஒப்படைக்கப்படும் விற்பனைகளுக்கும் அந்த ராஜ்ய அரசாங்கமானது விற்பனை வரி விதிக்கலாமென்பது ஏற்பட்டது. உதாரணமாக:— சென்னை ராஜ்யம் சம்பந்தப் பட்ட வரையில்— பம்பாய் ராஜ்யத்திலிருக்கும் ஒரு வியாபாரியானவர் தம்முடைய சரக்குகளைச் சென்னை ராஜ்யத்திலிருக்கும் வியாபாரி ஒருவருக்கோ அல்லது ஒரு தனி வாடிக்கைக்காரருக்கோ விற்பனை செய்வதாக ஒப்புக் கொள்ளுகிறார். விற்பனை ஒப்பந்தம் ஏற்பட்டது பம்பாயில். சரக்குகளின் சட்டபூர்வமான பாத்தியங்களும் பம்பாயிலேயே மாற்றப்பட்டன. அச்சரக்குகள் சென்னை ராஜ்யத்திற்கு அனுப்பப்படுகின்றன. அரசியல் அமைப்புச் சட்டப்படி இந்த விற்பனையானது சென்னை ராஜ்யத்திற்குள் ஏற்பட்டதாகவே பாவிக்கப்படும். சென்னை ராஜ்யத்திற்குள் ஏற்படும் இந்த விற்பனைக்குச் சென்னை அரசாங்கமானது விற்பனை வரி விதிக்கக் கூடும் என்று ஏற்படுகின்றது. அதைப் போலவே, சென்னை ராஜ்யத்திலிருக்கும் ஒரு வியாபாரியானவர் தம் சரக்குகளைப் பம்பாய், வங்காளம் முதலிய வெளி ராஜ்யங்களுக்கு அனுப்பினால், அந்தந்த ராஜ்யங்

களின் விற்பனை வரிச் சட்டப்படி சென்னை ராஜ்ய வியாபாரியானவர் விற்பனை வரி கொடுக்கக் கடமைப் பட்டவராவார்.

இவ்விதம் நமது சுப்ரீம் கோர்ட்டார் சட்ட விளக்கம் செய்த பிறகு, அந்தந்த ராஜ்ய சர்க்கார்கள், வெளி ராஜயங்களிலிருந்து தம் தம் ராஜ்யத்திற்குச் சரக்கு அனுப்பி விற்ற வியாபாரிகளின் மீது விற்பனை வரி விதிக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டனர். வரி விதிக்கப்பட வேண்டிய வெளி ராஜ்ய வியாபாரியைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து கொள்ளவும், வெளி ராஜ்ய வியாபாரிகளுக்கு நோட்டீசு அனுப்பி, கணக்குகளைத் தாக்கல் செய்யும்படிக்கும் நடவடிக்கைகள் ஏற்பட்டன. சில ராஜ்யங்கள் அரசியல் அமைப்புச் சட்டம் அமுலுக்கு வந்த தேதியாகிய 26-1-1950 தேதி முதல் ஏற்பட்ட இவ்வித விற்பனைகளுக்கும் வரி விதிக்க முற்பட்டன.

இதனால் வியாபாரிகளுக்கு ஏற்படும் தொல்லைகளைப்பற்றி வியாபார சங்கங்கள் ராஜ்ய சர்க்காருக்கும் முறையிட்டுக் கொண்டதின் பேரில் எல்லா ராஜ்ய அதிகாரிகளும் மத்திய சர்க்காருடன் கலந்து ஆலோசித்ததின் விளைவாக மத்திய சர்க்கார் 11-2-1954ல் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கின்றனர்.

வெளி ராஜ்ய வியாபாரியின் மீது 26-1-1950 தேதியிலிருந்தே விற்பனை வரி விதிக்கும் அதிகாரம் இருந்தாலும், சுப்ரீம் கோர்ட்டாரின் தீர்ப்புத் தேதியாகிய 30-3-1953-க்குப் பிறகே இவ் வரியை விதிப்பதாக ராஜ்ய சர்க்கார்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். சில ராஜ்ய சர்க்கார்கள் 1-4-1953 தேதிக்குப் பிறகும் மற்ற ராஜ்ய சர்க்கார்கள் 1-1-1954 தேதிக்குப் பிறகும் வெளி ராஜ்ய வியாபாரிகள் செய்த விற்பனைகளுக்கு வரி விதிப்பதாகத் தீர்மானித்திருக்கின்றனர். வெளி ராஜ்ய வியாபாரிகள் தங்களுடைய 'ரிடர்ன்'களைத் தபால் மூலம் அனுப்பலாம். மூன்று மாதத்திற்கு உட்பட்ட கெடுக்களுக்கு ரிடர்ன் அனுப்பும்படி எந்த ராஜ்ய சர்க்காரும் உத்தரவு பிறப்பிக்காது. வெளி ராஜ்ய வியாபாரியின் கணக்குகளை வரி விதிக்கும் ராஜ்ய அதிகாரி பரிசீலனை செய்யலாம். ஆனால் அந்த வெளி ராஜ்ய வியாபாரியின் வாசஸ்தலத்திற்கு அதிகாரமுள்ள விற்பனை வரி அதிகாரியின் தலைமைக் காரியாலயத்தில் தான் இப் பரிசோதனை நடக்கும். வெளி ராஜ்ய வியாபாரிகளிடமிருந்து சரக்கு வாங்கும் உள் ராஜ்ய வியாபாரி தாம் வாங்கும் சரக்குகளைப் பற்றி நமூனாப்படி உறுதி மொழி கொடுக்க வேண்டுமென்றும் வேறு சில நடைமுறைச் சௌகரியங்களையும் செய்வதாக ராஜ்ய சர்க்கார்கள் ஒப்புக் கொண்டிருக்கின்றன.

## விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 16 A என்ற ஷரத்து செல்லாது. சென்னை ஹைகோர்ட்டாரின் தீர்ப்பு.

விற்பனை வரிச் சட்ட அதிகாரிகளால் விதிக்கப்படும் விற்பனை வரித்தொகை, லைசென்சு தொகை இவைகளைச் செலுத்தாமல் இருப்பது அச்சட்டப்படி ஒரு கிரிமினல் குற்றமாகும். விற்பனை வரி கட்டாதவர்கள் மீது சர்க்கார் கிரிமினல் வழக்குத் தொடரலாம். அப்படி தொடரப்படும் கிரிமினல் வழக்குகளில்—"நான் வியாபாரியே அல்ல. என் மீது விற்பனை வரி விதிக்கவே சட்டமில்லை."—என்பது போன்ற கட்சிகளை எதிரிகள் சொல்லலாம். எதிரி சொல்லுவது சரியாக இருந்தால் சர்க்காரின் கிரிமினல் வழக்குத் தள்ளப்படும்—என்று இருந்தது. இந்த நிலைமையைச் சமாளிக்கச் சென்னைச் சட்டசபையானது 1948-ல் விற்பனை வரிச் சட்டத்தில் செக்ஷன் 16A என்ற ஒரு புதிய ஷரத்தைச் சேர்த்தனர். செக்ஷன் 16A என்பது இது தான்—"கிரிமினல் கோர்ட்டுகளில் நடக்கும் வழக்குகளிலும் மற்ற நடவடிக்கைகளிலும், வரி, அல்லது வேறு கட்டணங்களை விதித்தது செல்லாதென்ற கட்சியையோ, தாம் அவ்வரி அல்லது கட்டணங்களைக் கொடுக்கக் கடமைப் பட்டவரல்ல என்ற கட்சியையோ, எவரும் சொல்லக்கூடாது"— என்பதுதான்.

விற்பனை வரி அதிகாரிகள் சட்ட விரோதமாக ஒருவர் மீது விற்பனை வரி விதித்து விட்டால், அநியாயம் என்று எவரும் கிரிமினல் கோர்ட்டுகளில் கட்சியாட முடியாமல் போயிற்று.

விற்பனை வரிச் சட்டத்தின் இந்தச் செக்ஷன் 16A, என்ற ஷரத்தானது அரசியல் அமைப்புச் சட்டத்திற்கும் கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்திற்கும் முரணாக இருப்பதால், இந்த ஷரத்தே செல்லாதெனச் சென்னை ஹைகோர்ட்டார் இவ்வழக்கில் தீர்ப்பளித்திருக்கின்றனர்.

அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 14 என்ற ஷரத்தின்படி "இந்தியாவில் சட்டத்தின் முன்னிலையில் சமத்துவத்தையாவது, சட்டங்களின் சம பாதுகாப்பையாவது அரசாங்கமானது எவருக்கும் மறுக்கலாகாது."—என்று இருக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட எதிரிகள் எவரும் எவ்விதமான கட்சிகளையும் சொல்லி ருசுப்பித்து, கிரிமினல் வழக்குகளிலிருந்து தப்பிக்கொள்ளலாமென்ற வசதி இருக்கும்போது, விற்பனை வரிச்சட்டத்தை மீறிய குற்றவாளிகளுக்கு மட்டில் அவ்வசதியை மறுக்கும் விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 16A—என்பது அரசியல் அமைப்புக்கு முரணாக இருப்ப

தால், அது செல்லாதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டிருக்கின்றனர். மேலும் இந்த ஷரத்து, சட்டமாவதற்கு முன், கவர்னர் ஜெனரல் அவர்களுடைய அனுமதி பெற்றிருக்க வேண்டும். ஏனென்றால் மத்திய அரசாங்கமும், ராஜ்ய அரசாங்கமும், இருவரும் சட்டமியற்ற அதிகாரமுள்ள கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தைப் பற்றி ஒரு ராஜ்ய அரசாங்கமானது சட்ட மியற்ற வேண்டுமானால், முன்பு கவர்னர் ஜெனரல் அவர்களுடையவும், இப்பொழுது ஜனாதிபதி அவர்களுடையவும் அனுமதிபெற்றிருக்க வேண்டும். விற்பனைவரிச் சட்டத்தின் இந்த 16A ஷரத்தானது கிரிமினல் வழக்கு முறைச் சட்டத்தையே ஒரு இடத்தில் மாற்றுகிறபடியால், இதற்குக் கவர்னர் ஜெனரலுடைய அனுமதி வேண்டும். அவ்வனுமதி இல்லை. ஆகையாலும் இது செல்லாதென ஹைகோர்ட்டார் அபிப்பிராயப்பட்டனர்.

பிரஸ்தாப வழக்கில் சேலத்திலிருக்கும் சில தோல் வியாபாரிகள் விற்பனை வரி கட்டவில்லை என்று அவர்கள் மீது கிரிமினல் வழக்குத் தொடரப்பட்டது. அவர்களுடைய கட்சி இதுதான்:—"நாங்கள் இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்வதற்காகவேதான் தோல் வாங்கினோம். ஏற்றுமதி செய்கையில் ஏற்படும் விற்பனைகளுக்கு விற்பனை வரி விதிக்கக் கூடாதென்று நமது அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள்286 (1) ல் இருக்கிறது. ஆகையால் எங்கள்மீது விற்பனை வரி விதித்ததே தவறு. நாங்கள் அவ்வரியைக் கொடுக்கக் கடமைப் பட்டவர்களல்ல"—என்று கட்சி சொன்னார்கள். விற்பனைவரிச் சட்டத்தின் செக்ஷன் 16A ஷரத்தின்படி எதிரிகள் இக்கட்சியைச் சொல்லக் கூடாதென்று மாஜிஸ்ட்ரேட் தீர்ப்பளித்தார். ஹைகோர்ட்டில் இக்கட்சியைச் சொல்ல எதிரிகளுக்கு உரிமை உண்டென்று உயர் நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். ஏனென்றால் இக்கட்சியைத் தடை செய்யும் விற்பனை வரிச்சட்டத்தின் 16A ஷரத்து செல்லாது.

## வெளி ராஜ்ய வியாபாரங்களைப்பற்றிய தகவல்களை பாங்குகளிடமிருந்து சேகரிக்க, விற்பனை வரி விதிகள் திருத்தம்

விற்பனைவரி விதிகளில் விதி 29A என்று கீழே கண்டபடி ஒரு புதிய விதியை ஏற்படுத்த சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர். இவ்விதியை 1—1—1954 முதல் அமுலுக்குக் கொண்டு வரவும் உத்தேசித்திருக்கின்றனர். 25—2—1954 தேதியிலிருந்து நான்கு வாரங்களுக்குள் இவ்விதியைப் பற்றிப் ஆட்சேபனைகளையும் ஆலோசனைகளையும் சென்னை சர்க்கார் ரிவின்யூ டிபார்ட்மெண்ட், செக்ரடரிக்குத் தெரிவித்துக் கொள்ளலாம். உத்தேச விதி 29A:—சென்னை ராஜ்யத்திலுள்ள எல்லா பாங்குகளும் 1—1—1954 முதல் ஒவ்வொரு மாதமும், வெளி ராஜ்யங்களிலிருந்து வசூல் செய்யப் படுவதற்காக அவர்களுக்கு அனுப்பப்படும் உண்டியல்களைப் பற்றிய ஒரு விபர ஜாப்தா (Return) தயார் செய்து விற்பனை வரி அதிகாரிக்கு அனுப்பவேண்டும். பல கிளைகள் உள்ள பாங்குகளின் தலைமை ஆபீஸ் தான் இக்கணக்கை அனுப்பவேண்டும். பாங்கு அல்லது தலைமை ஆபீஸ் எங்கே இருக்கிறதோ அந்த இடத்திற்கு அதிகாரமுள்ள விற்பனை வரி விதிக்கும் அதிகாரிக்கு இது அனுப்பப்பட வேண்டும். ஒவ்வொரு மாதக் கணக்கும் அடுத்த மாதம் 15தேதிக்குள் நமூனா 20ன்படி அனுப்பப்பட வேண்டும். 1954 ஜனவரி, பிப்ரவரி மாதங்களுக்கு 15—4—1954 தேதிக்குள் அனுப்பினால் போதும். உண்டியல்களுடன் ரயில்வே ரசீது முதலிய தஸ்தாவேஜுகள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் விபரம் அனுப்பவேண்டும்; ஆனால் கம்பெனிப் பங்குகளை (ஷேர்) விற்பனை செய்தது சம்பந்தமான உண்டியல்களை இந்த ஜாப்தாவில் சேர்க்க வேண்டியதில்லை. நமூனா 20ல் வெளி ராஜ்ய வாசியின் பெயரும் விலாசமும், அவரால் அனுப்பப்பட்ட சரக்கின் விபரம், யாரிடமிருந்து தொகை வசூல் செய்யப்படவேண்டும், உண்டியல் தொகை, பாங்குக் கமிஷன் இந்த விபரங்கள் காணப்படவேண்டும். பாங்குக்காரர்கள் உறுதி மொழியுடன் கையெழுத்து செய்து இந்த 'ரிடர்ன்' அனுப்பவேண்டும். (25—2—1954. சென்னை சர்க்கார் கெஜட் விசேஷ வெளியீடு—பாகம் I.)

187729
சென்னை-600 008



# வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாட்டு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

## மைனருடைய சொத்துக்களைக் கார்டியன் கிரயம் செய்தார். மைனர் இறந்த பிறகு, கிரயம் செல்லாதென, மைனருடைய வார்சு தாவா செய்தார். காலாவதி என்ன?

[ஆதாரம்:—சென்னை ஹைகோர்ட்—67 லா வீக்லி—84.]

மைனருக்குச் சொந்தமான ஒரு சொத்தை அம்மைனருடைய கார்டியனாக இருப்பவர் விற்று விட்டால், மைனர் மேஜராகி மூன்று வருடத்திற்குள் அது செல்லாதெனக் கோர்ட்டில் தாவா செய்யலாம். அப்படி மூன்று வருடங்களுக்குள் தாவா செய்யா விட்டால், அக்கிரய சாசனத்தை மைனர் ஒப்புக்கொண்டதாகவே ஏற்படும். கார்டியன் செய்த கிரயமானது உறுதியாகி விடும். இது தான் காலாவதிச் சட்டத்திலிருப்பது. பிரஸ்தாப வழக்கில் ஒரு சிக்கல் ஏற்பட்டது. மேஜராவதற்கு முன் மைனர் இறந்துவிட்டார்.

துரைசாமி ரெட்டி என்பவருக்குச் சொத்துக்கள் சொந்தமாக இருந்தன. அவர் 1929ல் இறந்தார். அவருடைய மூத்த மனைவியின் மகனும் சில காலம் கழித்து இறந்து போகவே, சொத்துக்கள் எல்லாம் துரைசாமி ரெட்டியினுடைய மூன்றாவது மனைவியின் மகனான மைனர் சீதாராம ரெட்டிக்குச் சொந்தமாயின. இம்மைனர் 1926ல் பிறந்தவர். மைனருக்கு அவனுடைய தாயார் கோகிலம்பாள் தான் கார்டியன். கார்டியன் முறைமையில் கோகிலாம்பாள் 1933ல் மைனருடைய சொத்துக்கள் சிலவற்றைக் கிரயம் செய்தாள். 1936 அக்டோபர் மாதத்தில் மைனர் சீதாராம ரெட்டி இறந்தார். மைனர் சீதாராம ரெட்டியின் அடுத்த வார்சு அவருடைய தாயாரே. தாயாருடைய ஆயுளுக்குப் பிறகு மைனருடைய சொத்துக்களுக்கு வார்சு அம்மைனருடைய சகோதரி அலமேலு அம்மாள் என்பவள்.

அலமேலு அம்மாள் 1943ல் ஒரு தாவா செய்தாள். அதாவது இறந்த மைனர் சீதாராம ரெட்டியின் சொத்துக்களுக்கு, அவனுடைய தாயார் இறந்த பிறகு தாம் தான் வார்சு என்றும்; மைனருடைய சொத்துக்களை அவனுடைய தாயார் கிரயம் செய்திருப்பது செல்லாதெனவும், அப்படிச் செல்லாதென்பதை முன் கூட்டியே நிர்ணயம் செய்து விடவேண்டுமென்றும் கோரி தாவா தொடுத்தாள். தாவா 'பெண்டிங்'கில் இருக்கும் போதே, அதாவது 29—12—1944ல் வாதியின் தாயார் கோகிலாம்பாளும் இறந்து விட்டாள். வாதியே இறந்த மைனருடைய சொத்துக்களுக்குச் சட்டப்படி வார்சாகி விட்டபடியால், வாதி தான் கொடுத்த தாவாவைத் திருத்திக் கொண்டாள். சொத்துக்கள், அதாவது தன்னுடைய தாயாரால் கிரயம் செய்துவிட்ட சொத்துக்கள், தம்முடைய சுவாதீனத்திற்கே வரவேண்டுமென்று பரிகாரம் கேட்டு, தாவாவைத் திருத்திக் கொண்டாள்.

இத்தாவாவை முதலில் விசாரித்த டிஸ்டிரிக்ட் முன்சீப்பும், அதன் பேரில் நடந்த அப்பீலை விசாரித்த ஜில்லா ஜட்ஜும் அலமேலு அம்மாள் செய்த தாவாவானது காலாவதி கெடுவுக்குப் பிறகு தொடுக்கப்பட்டிருப்பதாக அதைத் தள்ளி விட்டனர். மைனர் சீதாராம ரெட்டி இறந்துபோன காலமாகிய 1936 அக்டோபர் மாதத்திலிருந்து மூன்று வருடங்களுக்குள் அதாவது 1939 அக்டோபர் மாதத்திற்குள் வாதி தாவா செய்திருக்க வேண்டுமென்றும், வாதி 1943ல் செய்த தாவாவானது காலாவதி தோஷத்தால் பாதிக்கப் பட்டிருக்

றதெனவும் அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

வாதி அலமேலு அம்மாள் சென்னை ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தாள். அப்பீலை விசாரித்த இரண்டு உயர் நீதிபதிகள் அவர்களும் வாதியின் தாவா காலாவதியால் பாதிக்கப்படவில்லை என அபிப்பிராயப்பட்டு, தீர்ப்பளித்தனர், மைனர் உயிருடனிருந்தால் எந்தக் கெடுவுக்குள் அம் மைனர் தாவா செய்திருக்கலாமோ அதே கெடுவுக்குள், அம் மைனர் இறந்த பிறகும், அவருடைய வார்சுகளு தாவா செய்யலாமென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

பிரஸ்தாப வழக்கில் மைனர் சீதாராம ரெட்டி பிறந்தது 1926ல். அவர் மேஜராகவேண்டிய வருடம் 1944ல். அதிலிருந்து மூன்று வருடங்களுக்குள், அதாவது 1947க்குள், மைனர் உயிருடனிருந்தால் இவ்விதத் தாவா செய்திருக்கலாம். அதாவது தம்முடைய கார்டியன் செய்த கிரயங்கள் செல்லாதெனத் தாவா செய்திருக்கலாம். மைனர் இறந்துபோய் விட்டாலும், அந்த 1947க்குள் அவ்விதத் தாவா செய்ய மைனருடைய வார்சுகளுக்கும் உரிமை உண்டு. அலமேலு அம்மாள் தாவா செய்திருப்பது அக் கெடுவுக்குக்குள் தான். 1943ல் தொடுத்த அவளுடைய தாவா காலாவதியாக வில்லை என ஹைகோர்ட்டார் அபிப்பிராயப் பட்டனர். தாவாவை ஏற்றுக்கொண்டு மேல் விசாரணை செய்யும்படி ஹைகோர்ட்டில் தீர்ப்பு ஏற்பட்டது.

## பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் சொந்த மார்க்கெட்டுகளை மூடுவது பற்றிய பஞ்சாயத்துச் சட்ட ஷரத்து செல்லாது—சென்னை ஹைகோர்ட்டாரின் தீர்ப்பு.

பஞ்சாயத்துச் சட்டத்தைப் பற்றிய ஒரு முக்கியத் தீர்ப்பானது சென்னை ஹைகோர்ட்டாரால் சென்ற 13—11—1953ல் அளிக்கப்பட்டது. (1952 ஆம் வருடத்திய 165 ஆம் நெ. ரிட் மனுவின்பேரில் பிரதம நீதிபதி ராஜமன்னர் அவர்களும் உயர் நீதிபதி வெங்கடராமய்யர் அவர்களும் இத்தீர்ப்பை அளித்திருக்கின்றனர்.)

பஞ்சாயத்து எல்லைக்குள் இருக்கும் சொந்த மார்க் கெட்டுக்களை (Private Markets)ப்பற்றி, பஞ்சாயத்துச் சட்டத்தில் சில ஷரத்துக்கள் இருக்கின்றன. அச் சட்டத்தின் செக்ஷன் 81 (1) என்ற ஷரத்தில் சென்னைப் பஞ்சாயத்துச் சட்டம் அமுலுக்கு வந்த பிறகு எவரும் புதிதாக ஒரு சொந்த மார்க்கெட்டை ஏற்படுத்தக் கூடாதென்றும், இச் சட்டம் வருவதற்கு முன்பே இருக்கும் சொந்த மார்க்கெட்டுக்களையும் சர்க்காரால் குறிப்பிடப்படும் தேதிக்குப் பிறகு எவரும் நடத்தக்கூடாதென்றும் இருக்கிறது. ஆனல் கல்வி, தர்மம், அல்லது மத சம்பந்தமாக ஒரு சொந்த மார்க்கெட்டின் நிகர வருமானங்கள் யாவும் செலவு செய்யப்பட்டு வந்தால், அவைகளுக்கு மட்டில் விதி விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

சென்னைக் கிராமப் பஞ்சாயத்துச் சட்டமானது 1—4—1951 முதல் அமுலுக்கு வந்தது. 1—4—1952க்குப் பிறகு எவரும் சொந்த மார்க்கெட்டை நடத்தக் கூடாதென்று சென்னைச் சர்க்கார் ஒரு அறிக்கை பிறப்பித்தனர்.

இந்த அறிக்கையால் பாதிக்கப்பட்ட குருப் என்பவர், படகார பஞ்சாயத்துப் போர்டின் மீது சென்னை ஹைகோர்ட்டில் தாகல் செய்த 'ரிட்' மனுவில் இப்பிரச்னை எழுந்தது. அதாவது சொந்த மார்க்கெட்டுக்களை ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் மூடிவிட வேண்டுமென்று ஏற்புறுத்தும் சென்னைப் பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 81 (1) என்ற ஷரத்தும், அதை அனுசரித்துச் சென்னைச் சர்க்காரால் விடுவிக்கப்பட்ட அறிக்கையும் செல்லுமா என்ற பிரச்னை எழுந்தது. இவை அரசியல் அமைப்புச் சட்டத்தில் கண்ட ஒரு ஜீவாதார உரிமைக்கு முரணாக இருப்பதால், இவை செல்லாதென உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் ஆர்டிகிள் 19 (1) (f) என்ற ஷரத்தின்படி, இந்தியப் பிரஜைகள் எவரும் சொத்துக்களைச் சம்பாதிக்கவும், வைத்திருக்கவும் விநியோகப்படுத்தவும் உரிமை உடையவர் ஆவார். இது மக்களின் ஜீவாதார உரிமைகளுள் ஒன்று. இதற்கு முரணான எந்தச் சட்டமும், எந்தச் சர்க்கார் உத்தரவுகளும் செல்லாதென நமது அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே இருக்கின்றது.

சொந்த மார்க்கெட் என்பது ஒரு சொத்துரிமை என்றும், அந்த உரிமையை அடியோடு பறித்து விடும். பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 81 (1)ல் கண்ட ஷரத்தும் சர்க்கார் அறிக்கையும் அரசியல் அமைப்புச் சட்ட ஷரத்துக்களுக்கு முரணாக இருக்கிறதென்றும் ஆகையால் அவை செல்லமாட்டா என்றும் உயர் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர்.

[ஆதாரம்—மதராஸ் லா ஜர்னல்—1954 (1) குறிப்புகள் பக்கம் 12.)

சென்ற இதழ் தொடர்ச்சி.




# தொழிற்சாலைச் சட்டம்

(விதிகள், அறிக்கைகளுடன் விளக்கம்.)

[தொழிற்சாலைச் சட்டம் (The Factories Act—1948) என்பது 1948ஆம் வருடத்திய 63ஆவது மத்தியச் சட்டம். இச்சட்டம் 1—4—1949 முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்ட ஷரத்துக்களும், அதை அனுசரித்து சென்னைச் சர்க்காரால் இயற்றப்பட்டுள்ள விதிகளும் "வக்கீல்"—1954 ஜனவரி இதழ் முதல் தொடர்ச்சியாக விளக்கம் செய்யப்பட்டு வருகிறது. இதிலிருப்பது சட்ட விளக்கமே ஒழிய மொழிபெயர்ப்பு அல்ல.]

## சர்ட்டிபையிங் சர்ஜனுடைய அதிகாரங்கள்

தொழிற்சாலைச் சட்டத்தின் செக்ஷன் 68ன் படி, 14 வயது பூர்த்தியாகி 15 வயது பூர்த்தியாகாத 'குழந்தை'களும், 15 வயது பூர்த்தியாகி 18 வயது பூர்த்தியாகாத 'இளைஞர்'களும் ஒரு தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட வேண்டுமானால் அவர் ஒரு 'டாக்டர் சர்டிபிகேட்' வாங்க வேண்டும். இதற்கு 'தகுதிப்பத்திரம்' அல்லது 'Certificate of fitness' என்று பெயர். இந்தச் சர்டிபிகேட் இல்லாவிட்டால் எந்தச் சிறுவரும் எந்தத் தொழிற்சாலையிலும் வேலை செய்யக் கூடாது; வேலை செய்ய அனுமதிக்கவும் கூடாது. இவ்விதச் சிறுவர்களைப் பற்றிய சர்ட்டிபிகேட்டுகள் தொழிற்சாலையில் மானேஜர் வசம் இருக்க வேண்டும். அங்கே வேலை செய்யும் ஒவ்வொரு சிறுவரும் இந்தச் சர்டிபிகேட் உள்ளவர் என்று ஒரு சின்னத்தை மாட்டிக் கொண்டு தான் வேலை செய்ய வேண்டும்.

இவ்விதச் சிறுவர்கள் ஒரு தொழிற்சாலையில் வேலைக்கு அமர்த்தப்பட வேண்டுமானால், அச்சிறுவரோ, அவருடைய கார்டியனோ அதிகாரமுள்ள டாக்டருக்கு மனுச் செய்ய வேண்டும். சர்டிபிகேட் கிடைத்தால் அச்சிறுவனைத் தாம் வேலைக்கு அமர்த்திக் கொள்ள இஷ்டப்படுவதாக அத்தொழிற்சாலை மானேஜரிடம் கடிதம் வாங்கித் தாக்கல் செய்ய வேண்டும். அல்லது தொழிற்சாலை மானேஜரே டாக்டருக்கு மனுச் செய்யலாம். இச்சிறுவர்களை அதிகாரமுள்ள டாக்டர்கள் பரிசோதனை செய்து நமூனா 5 ன்படி 'தகுதி சர்டிபிகேட்' கொடுக்க உரிமை உண்டு. இந்த சர்டிபிகேட்டின் பிரதி ஒன்றைத்தான் தொழிற்சாலை மானேஜர் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதைத் தவிர சீப் இன்ஸ்பெக்டருடைய வேண்டுகோளின்படி எவ்விதத் தொழிற்சாலைகளில் ஏற்படும் வியாதிகளேனும் அங்கே நடத்தப்படும் தொழில் முறைகளாலாவது, அங்கு வேலை செய்யப்படும் சூழ்நிலைகளிலாவது ஏற்படக்கூடியதாக இருக்கின்றனவா என்றும் பார்க்கவும்; எந்தத் தொழில் முறையிலும் புதுத்தினுசு யந்திரங்களினாலாவது, புதுவகைச் சரக்கு உபயோகப்படுத்தப்படுவதாலாவது, புதிய தொழில் முறை கையாளப்படுவதாலாவது, அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு ஏதாவது தேக அசௌக்கியம் ஏற்படக் கூடியதாக இருக்கிறதா என்று பார்க்கவும்; எந்தத் தொழிற்சாலைகளிலும் சிறுவர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வது அவர்களுக்குத் தேக அசௌக்கியத்தை உண்டாக்கக் கூடியதா என்று பார்க்கவும்; மேற்கண்ட டாக்டர்களுக்கு அதிகாரமுண்டு. அபாயகரமான வேலைகள் நடக்கும் தொழிற்சாலைகளுக்கு விதிகளால் குறிப்பிடப்படும் காலங்களில் போய், சோதனை செய்ய வேண்டிய கடமையும் இவர்களுக்கு உண்டு.

இவ்விதத் தொழிற்சாலைகளுக்குப் போய் அங்கே வேலை செய்யும் தொழிலாளர்களைப் பரீட்சை செய்து தம் அபிப்பிராயத்தை நமூனா 17-ன்படி அங்கே வைக்கப்பட்டிருக்கும் 'ஹெல்த் ரிஜிஸ்டர்' (Health Register) என்ற புத்தகத்தில் இவர் பதிவு செய்ய வேண்டும். வைத்தியப் பரீட்சை காரணமாக எந்தத் தொழிலாளரும் குறிப்பிட்ட காலத்திற்கு அங்கே வேலை செய்வதை அவர் தடுத்து அத்தொழிலாளரை 'சஸ்பெண்டு' செய்யலாம். டாக்டர்கள் சோதனை செய்ய, தொழிற்சாலை மானேஜர் வேண்டிய வசதி

களைச் செய்து கொடுப்பதுடன், அந்த டாக்டர் வைத்தியப் பரீட்சைகள் செய்ய அவருக்குச் சுத்தமான காற்று வெளிச்சமுள்ள ஒரு தனி அறையைக் கொடுக்க வேண்டும். அங்கே ஒரு மறைவு அடைப்பு (ஸ்க்ரீன்) ஒரு மேஜை, நாற்காலிகள், எழுதுவதற்கு வேண்டிய பேப்பர், பேனா முதலியவைகளையும் வைத்திருப்பது தொழிற்சாலை மானேஜரின் கடமையாகும்.

## தேக ஆரோக்கியம்

செக்ஷன் 11

ஒவ்வொரு தொழிற்சாலையும் சுத்தமாகவும் சாக்கடை கக்கூஸ் முதலிய இடங்களிலிருந்து துர்நாற்றம் அடிக்காமலும் வைத்துக் கொள்ளப்படவேண்டும். முக்கியமாக, வேலை நடக்கும் இடங்களில், தரை, பெஞ்சுகள், மாடிப் படிகள், வழி நடைகள் இந்த இடங்களில் குப்பை கூளம் சோதபடி தின சரி கூட்டி, சுத்தம் செய்யப்படவேண்டும். வேலை நடக்கும் இடங்களை வாரம் ஒரு முறையாவது, கிரிமி நாசினிகளை உபயோகித்துக் கழுவிவிடவேண்டும். வேலை நடக்கும் இடங்கள் ஈரமாகப் போகக் கூடியதாக இருந்தால் அங்கே ஜலம் சோரதபடி சாக்கடைகள் அமைக்கப்பட வேண்டும். உள் சுவர்கள், அடைப்புகள், பச்சுகள், கூரை, வழி நடைகளின் மாடிப்படிகள் இவைகளின் சுவர்கள், மேல் டக்கம் முதலியவற்றை 5 வருடங்களுக்கு ஒரு முறை பெயிண்ட் அல்லது வார்னிஷ் அடித்து வைக்கவேண்டு; குறைந்தது 14 மாசங்களுக்கு ஒரு முறையாவது அலம்பிவிட வேண்டும்; மற்றவைகளை 14 மாதங்களுக்கு ஒரு முறை வெள்ளையடித்தோ, கலர் அடித்தோ வைக்கவேண்டும். வெள்ளையடித்த தேதி, கலர் அடித்த தேதி, வார்னிஷ் அடித்த தேதி இவைகளை நமூனா 7ன்படி உள்ள ரிஜிஸ்டரில் பதிவு செய்துகொள்ள வேண்டும். சில தொழிற்சாலைகளில்

விதி 16

நடக்கும் வேலைகளை உத்தேசித்து மேற்கண்டபடி சுத்தம் செய்ய முடியாத தொழிற்சாலைகளுக்கு இவ்விதியிலிருந்து விதி விலக்கு அளிக்க, சர்க்காருக்கு அதிகாரமுண்டு. அவ்விதம் விதிவிலக்கு அளிக்கப்பட்ட தொழிற்சாலைகள், விதி 15ல் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இவைகளையும் வேறு வகைகளில் சுத்தமாக வைத்துக் கொள்ள நிபந்தனைகள் ஏற்படுத்தலாம். இவைகளிலும் வெள்ளை அடித்தோ கழுவியோ ஆகவேண்டுமென உத்தரவிட, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. அவர் உத்தரவின்படி இரண்டு மாதங்களுக்குள் நடக்காவிட்டால் இவ்விதிவிலக்கு ரத்தானதாகப் பாவிக்கப்படும். இவ்விதம் விதி விலக்கு அளிக்கப்பட்ட தொழிற்சாலைகள் :—(1) பிளாஸ்ட் பர்னேசுகள் (2) இரும்பு எஃகு மில்கள் (3) கல், ஸ்லேட், சலவைக்கல் வேலைகள் (4) கல் ஓடு செய்யும் தொழிற்சாலைகள் (5) சிமிண்டு செய்யும் தொழிற்சாலைகள் (6) ரசாயன சாமான்கள் செய்யும் தொழிற்சாலைகள் (7) காஸ் ஒர்க்ஸ் (8) கப்பல் கட்டும் இடங்கள் (9) துப்பாக்கித் தொழிற்சாலைகள் (10) ஒவ்வொரு தொழிலாளருக்கும் 3000 கன அடி காற்றுப் புழக்கமுள்ள இடம் அளிக்கும் என்ஜினியரிங் அல்லது வார்ப்பு தொழிற்சாலைகள் (11) எலெக்டிரிக் சக்தி உற்பத்திச் சாலைகள் (12) பித்தளை தவிர மற்ற உலோகங்களை உருக்கும் சாலைகள் (13) சர்க்கரை உற்பத்தி ஆலைகள்; சர்க்கரை சேமித்து வைக்கும் ஆலைகள். (14) மோட்டார் வண்டி மேல் பாகம் கட்டும் தொழிற்சாலைகள் (15) மர ஆலைகள். (16) மரவேலைத் தொழிற்சாலைகள் (17) தேயிலைப் பாக்டரிகளின் சுவர்கள் (18) ஆயில் மில்களின் சுவர்கள்—கீழே இருந்து 5 அடி வரையில் (19) சோப் செய்யுமிடம் (20) தோல் பதனிடும் வேலைகள் செய்யுமிடம். (21) இன்ஸ்பெக்டரின் அபிப்பிராயத்தில் விதி விலக்கு அளிக்கக்கூடிய இடங்கள் (22) ஸ்டோர் ரூம்கள்.

## குப்பை கூளங்களை அகற்றுவது பற்றி

செக்ஷன் 12 விதி 17.

உற்பத்தி வேலைகளில் விழும் குப்பை கூளங்களை அகற்ற, தொழிற்சாலையில் சரியான ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும். பொதுச் சாக்கடைத் திட்டமிருக்கும் இடங்களில் சாக்கடை அதில் விழுவதுபற்றி அந்தந்த ஸ்தல ஸ்தாபனங்களின் அனுமதி பெற்றுக் கொள்ளவேண்டும். மற்ற இடங்களில் குப்பை கூளங்களை அப்புறப்படுத்துவதுபற்றி 'பப்ளிக் ஹெல்த் அதாரடி'யின் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.

## காற்றோட்டமும் சீதோஷ்ணமும்.

செக்ஷன் 13

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஒவ்வொரு அறையிலும் புதிய காற்று புகும்விதம் காற்றோட்டமுள்ளதாகவும், தொழிலாளர்களுக்குச் சுகமாகவும், தேக அசௌக்கியத்தை உண்டாக்காமலும் இருக்கக் கூடிய விதம் சீதோஷ்ணமுள்ளதாகவும் வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவேண்டும். வேலை செய்யும் அறைகளில் வெயில் அல்லது கானல் அடிக்காதபடியும் வேலையால் ஏற்படும் உஷ்ணம் பரவாமலும் கூரை போடப்பட்டிருக்கவேண்டும். இதற்காக அறைகள் கூரைகள் முதலியவை

எவ்விதம் அமைக்கப்படவேண்டுமென்று உத்தரவிடச் சர்க்காருக்கு அதிகாரமுண்டு. தொழில் முறைகளால் ஏற்படக்கூடிய புகை தூசி இவைகள் தொழிலாளர்களைப் பாதிக்காவண்ணம் புகை போக்கி முதலியவை நிறுவப்படவேண்டும்.

## செயற்கைக் குளிர்ச்சி

**செக்ஷன் 15 விதிகள் 18 to 28.**

எந்தத் தொழிற்சாலையிலாவது காற்றுனது செயற்கை முறைகளால் குளிர்ச்சியாகச் செய்யப்பட்டால், அத்தொழிற்சாலைகள் இவ்விஷயம் சம்பந்தமாகச் சர்க்காரால் இயற்றப்படும் விதிகளின்படி அவ்விதம் செய்யவேண்டும். அவ்விதத் தொழிற்சாலைகளில் குடி தண்ணீர் பொதுக் குழாய்களிலிருந்தோ அல்லது வேறு இடங்களிலிருந்தோ எடுத்துக் கொள்ளப் படவேண்டும். அல்லது குடி தண்ணீர் நன்ருகச் சுத்தம் செய்யப் படவேண்டும். குடி தண்ணீர் விஷயமாக இன்ஸ்பெக்டர் யுக்தமான உத்தரவுகள் பிறப்பிக்கலாம். இது சம்பந்தமாக சர்க்காரும் விதிகள் இயற்றி இருக்கின்றனர்.

## இடநெருக்கடி.

**செக்ஷன் 16**

எந்தத் தொழிற்சாலையிலும் அங்கே வேலை செய்பவர்களின் தேக ஆரோக்கியத்திற்குக் கெடுதி நேரிடும் விதம் அதிக தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்வது கூடாது. இச்சட்டம் அமுலுக்கு வந்த தேதியிலேயே உள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்யும் ஒவ்வொரு தொழிலாளருக்கும் 300 கன அடி வீதம் கணக்குச் செய்தும் பிறகு ஏற்படும் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர் ஒவ்வொருவருக்கும் 500 கன அடி வீதம் கணக்குச் செய்தும் இடப்புழக்கம் இருக்கவேண்டும். இப்படி கணக்குச் செய்வதில் தரையிலிருந்து 14 அடிக்கு மேலே இருக்கும் இடத்தைச் சேர்த்துக் கொள்ளக்கூடாது. சீப் இன்ஸ்பெக்டர் அவ்விதம் எழுத்துமூலம் உத்தரவு செய்தால், ஒவ்வொரு அறையிலும் எவ்வளவு தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யக்கூடாதென்று காண்பிக்கும் ஒரு நோட்டீஸ் ஒட்டப்படவேண்டும். விதிவிலக்கு அளிக்கவும் சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு.

## வெளிச்சம்

தொழிலாளர்கள் வேலை செய்தும் நடமாடிக் கொண்டுமிருக்கும் இடங்களில் போதமான வெளிச்சம் இருக்கவேண்டும். இயற்கை வெளிச்சமாக இருந்தாலும் இருக்கலாம்; செயற்கை வெளிச்சமாக இருந்தாலும் இருக்கலாம். கண்ணுடிகள் இரண்டு பக்கமும் துடைத்துச் சுத்தமாக வைத்துக் கொள்ளப்படவேண்டும். மேலும் சூரிய வெப்பம்படாமலும், அதிக நிழல் விழாமலும் இருக்கவேண்டும்.

## செயற்கை வெளிச்சம்

**செக்ஷன் 17 விதிகள் 29—33**

ஒரு வாரத்தில் 48 மணி நேரம் வேலை நடக்கும் தொழிற்சாலைகள் சம்பந்தப்பட்ட வரை, சில விசேஷ விதிகள் இருக்கின்றன. அதாவது விதிகள் 29 முதல் 33 முடிய உள்ள விதிகள். இவ்விதிகள் 1-1-1952 முதல் எல்லாத் தொழிற்சாலைகளிலும் அமுலுக்கு வந்து விட்டன.

இவ்விதிகளில் குறிப்பிட்ட அளவு வெளிச்சம் வேலை நடக்கும் இடங்களிலும், நடைபாதைகளிலும் கட்டாயமாக இருக்கவேண்டும். இது தவிர அங்கே நடக்கும் வேலைகளுக்கேற்றவாறு போதுமான வெளிச்சம் இருக்கவேண்டும். விளக்குகளின் வெளிச்சம் 100 அடிக்குள் வேலை செய்பவர்களின் கண்கள் கூசாத விதம் அமைக்கப்படவேண்டும். இவ்விதிகளிலிருந்து விதிவிலக்கு அளிக்க, சீப் இன்ஸ்பெக்டருக்கு அதிகாரமுண்டு. மேலும் சிலவகைத் தொழிற்சாலைகளுக்கு அங்கே நடக்கும் வேலைகளின் ரீதியை உத்தேசித்து, விதிகளிலேயே விதிவிலக்குகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

## குடி தண்ணீர்

**செக்ஷன் 18 விதி 34**

ஒவ்வொரு தொழிற்சாலையிலும், அங்கே வேலை செய்யும் எல்லாத் தொழிலாளர்களும் எளிதில் எடுத்துக் கொள்ளும் விதம் சௌகரியமான இடங்களில் போதுமான சுத்தமுள்ள குடி தண்ணீர் வைக்கப்பட்டிருக்க வேண்டும். தொழிலாளர்களின் பெரும்பான்மையோருடைய தாய்ப் பாஷையில் 'குடி தண்ணீர்' என்று தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும் இடங்களில் எழுதப்பட்டிருக்கவேண்டும். குடி தண்ணீர் வைக்கப்பட்டிருக்கும் இடங்கள், கக்கூஸ் முதலிய மல ஜலம் கழிக்குமிடங்களுக்கு 20 அடிக்குள் இருக்கக் கூடாது. ஆனால் இவ்விதிக்கு, சீப் இன்ஸ்பெக்டர் விதிவிலக்கு அளிக்கலாம். சாதாரணமாய்க் குறைந்தது 250 தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில், வெயில் நேரங்களில் குடிதண்ணீர் குளிர்ச்சியாக்கப்பட்டு வைக்கப்படவேண்டும். ஒவ்வொரு தொழிலாளருக்கும் ஒரு காலன் வீதம் கணக்குச் செய்து, வேலை நேரங்களில் அந்த அளவு குடிதண்ணீர் எப்பொழுதும் இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். பொதுத் தண்

ணீர்த் திட்டத்திலிருந்து வரும் குழாய் மூலமாக வரும் தண்ணீரையோ அல்லது ஹெல்த் ஆபீசர் எழுத்து மூலம் அங்கீகரித்திருக்கும் இடத்திலிருந்து எடுக்கப்படும் தண்ணீரையோ தான் குடிதண்ணீராக உபயோகப்படுத்த வேண்டும். பொதுக் குழாய்த் தண்ணீர் தொடர்ச்சியாக வராமலிருந்தால், அத்தண்ணீரைச் சுத்தமான பாத்திரங்களில் வைக்கப்படவேண்டும். அப்பாத்திரங்கள் தூசி புகாமல் மூடப்பட்டும், கீழே குழாய் வைக்கப்பட்டும், உயரத்தில் அமர்த்தி வைக்கப்பட்டும் இருக்க வேண்டும். கீழே சிந்தும் ஜலம் வெளியே போக, சாக்கடைகள் அமைக்கப்பட்டிருக்கவேண்டும். ஒரு தினத்தில் ஒரு தடவையாவது புதிய தண்ணீர் மாற்றப்படவேண்டும். ஆழமான பாதுகாக்கப்பட்ட கிணறு அல்லது 'டியூப் வெல்'களிலிருந்து குழாய் மூலம் நேராக எடுக்கப்படும் தண்ணீரையும் உபயோகப்படுத்தலாம். வெளி அசுத்தங்கள் சேர்ந்து கெட்டுப் போகக் கூடியதாக இல்லாதிருந்தாலொழிய திறந்த கிணறு அல்லது தேக்கத்திலிருக்கும் தண்ணீரைக் குடிதண்ணீராக உபயோகப்படுத்தக் கூடாது. அவ்விதக் கிணறு அல்லது தேக்கத்திலிருந்து தண்ணீர் எடுக்கப்படவேண்டுமானால் குறைந்தது வாரத்தில் ஒரு முறையாவது, இன்ஸ்பெக்டருடைய உத்தரவுப்படி கிருமி நாசகாரிகளை உபயோகித்து, தண்ணீர் சுத்தம் செய்யப்படுவதுடன், அது விபரத்தை ஒரு ரிஜிஸ்டரிலும் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

ஆனால் தண்ணீர் உபயோகப்படுத்தப்படுமுன் அதை வடிகட்டி, கிருமிகள் இல்லாமல் செய்தாலும் பாதகமில்லை. இவ்விதம் செய்வதை ஹெல்த் ஆபீசர் அனுமதிக்கவேண்டும்.

தேவையான காலங்களில் குடிதண்ணீரை ஹெல்த் ஆபீசரிடம் காண்பித்து அவர் சோதனை செய்து, அத்தண்ணீர் குடிக்கத் தகுதியுள்ளதென்று சர்டிபிகேட் வாங்கி, தாக்கல் செய்யும்படி இன்ஸ்பெக்டர் தொழிற்சாலை மானேஜருக்கு உத்தரவிடலாம்,

## குளிர்ந்த நீர்

சாதாரணமாய் 250 தொழிலாளர்கள் வேலை செய்யும் தொழிற்சாலைகளில கோடைக் காலங்களில் குடி தண்ணீருடன் சுத்தமான 'ஐஸ்' சேர்த்தோ ரிப்ரிஜிரேடர் மூலமாகவோ வேறு விதமாகவோ அதைக் குளிர்ச்சியுள்ளதாகச் செய்யவேண்டும். தொழிற்சாலைகளிலுள்ள 'காண்டீன்' என்ற சிற்றுண்டிச் சாலைகளிலும், ஓய்வு அறைகளிலும், வேறு சுலபமாக எடுத்துக் கொள்ளக் கூடிய இடங்களிலும் இக்குளிர்ந்த குடி தண்ணீர் வைக்கப்பட்டிருக்கவேண்டும். இதற்கு 'வாடர் செண்டர்கள்' அல்லது குடி தண்ணீர் வைக்குமிடம் (Water Centres) என்று பெயர். 'வாடர்செண்டர்கள்' மேலே நன்றாக மூடப்பட்டுச் சாக்கடை வசதிகளுடன் இருக்கவேண்டும், ஒவ்வொரு 150 தொழிலாளர்களுக்கும் ஒரு 'வாடர்செண்டர்' இருக்க வேண்டும். 500 தொழிலாளர்களுக்குமேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் முதல் 500 வரையில் மேற்கண்டபடி கணக்குச் செய்தும், அதற்குமேல் ஒவ்வொரு 500 தொழிலாளர்களுக்கு ஒரு 'வாடர் செண்டர்' விகிதமும் இருக்கவேண்டும். ஒவ்வொரு 'வாடர் செண்டட'ரிலும் ஒரு தண்ணீர் சப்ளை சிப்பந்தி அமர்த்தப்படவேண்டும். அவர்தான் குடி தண்ணீர் கொடுக்கவேண்டும். அவர் வேலை செய்யும் போது சுத்தமான ஆடைகளுடன் இருக்க வேண்டும்.

## மல ஜலத்திற்கு ஒதுங்கும் இடங்கள்

**செக்ஷன் 19 விதிகள் 40-49**

தொழிற் சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் வேலை செய்யும் எந்த நேரத்திலும் சுலபமாக உபயோகப்படுத்தப்படக் கூடிய இடங்களில் தேவையான கக்கூசுகளும், ஜலக்கழிவு இடங்களும் அமைக்கப்பட வேண்டும். ஆண்களுக்கு வேறு பெண்களுக்கு வேறு தனித்தனி இடங்கள் இருக்கவேண்டும். மல ஜலம் கழிக்கும் இடங்கள் நல்ல வெளிச்சத்துடனும். காற்றோட்டமாயும், வேலை செய்யும் இடங்களுக்கும் மல ஜலம் கழிக்கும் இடங்களுக்கும் இடை வெளியுள்ளதாகவும், இருக்கவேண்டும். அந்த இடங்கள் எப்பொழுதும் சுத்தமாகவும் சுகாதார விதிகளின் படிக்கும் வைத்துக்கொள்ளப்பட வேண்டும். இதற்காகத் தேவையான சுத்தம் செய்யும் சிப்பந்திகள் அமர்த்தப்படவேண்டும். சாதாரணமாய் 250 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்யும் தொழிற்சாலைகளில், கக்கூசுகள் விதிகளின்படி அமைக்கப்படவேண்டும். கீழே தரையும் சுவரில் 3 அடி வரையிலும் சலவைக் கல் பொருத்தப்பட்டோ அல்லது வழவழப்பாகச் செய்யப்பட்டோ இருக்கவேண்டும். இவைகளும் வாரத்தில் ஒரு தடவையாவது கிருமிநாசினிகளால் நன்றாகக் கழுவிவிடப்படவேண்டும். தொழிற்சாலைகளில் ஒரே காலத்தில் வேலை செய்யக் கூடிய 20 பெண்களுக்கு ஒரு கக்கூஸ் வீதமும், 20 ஆண்களுக்கு ஒருகக்கூஸ் வீதமும் இருக்க வேண்டும். ஆண்கள் 100க்கு மேல் இருந்தால் 100க்கு மேற்பட்டவர்களுக்கு ஒவ்வொரு 50 ஆண்களுக்கும் ஒரு கக்கூஸ் வீதம் கணக்குச் செய்து கொள்ளலாம். பொதுச் சாக்கடைத்

திட்டத்துடன் சேர்க்கப்பட்டிருந்தா லொழிய மற்ற கக்கூசுகள் சுகாதார அதிகாரிகளின் அபிப்பிராயப்படி அமைக்கப்பட வேண்டும். கக்கூசுகள் மேலே மூடப்பட்டும், ஒவ்வொருவரும் தனித்தனியாகவும் பார்க்கப்படாமலும் இருக்க அறை, கதவு, தாழ்ப்பாள் வசதிகளுடனும் இருக்கவேண்டும். ஆண் பெண் இருவர்களும் வேலை செய்யும் தொழிற்சாலைகளில் 'ஆண்களுக்கு மாத்திரம்' 'பெண்களுக்கு மாத்திரம்' என்று தாய்ப் பாஷையில் எழுதப்பட்டிருப்பதுடன் ஆண் பெண் சித்திரங்களும் வரையப்பட்டிருக்க வேண்டும்.

ஜலம் மட்டில் கழிக்குமிடங்கள் 50 தொழிலாளர்களுக்குக் குறைந்தது 2 அடி நீளமுள்ள இடமாக இருக்க வேண்டும். 500க்கு மேற்பட்டு ஒவ்வொரு 100 தொழிலாளர்களுக்கும் ஒரு இடமாக கணக்குச் செய்தால் போதும். பொதுச் சாக்கடைத் திட்டத்துடன் பொருத்தப் பட்டிருந்தாலொழிய, ஜலம் கழிக்குமிடங்கள் சுகாதார அதிகாரிகளின் அபிப்பிராயப்படி இருக்க வேண்டும்.

மூடு சாக்கடைத் திட்டம் உள்ள இடங்களில் அத்திட்டத்தைச் சேர்ந்த குழாய்களிலிருந்து 100 அடிக்குள் இருக்கும் தொழிற்சாலைகளில் உள்ள மலஜலம் கழிக்கும் இடங்கள் அத்துடன் இணைக்கப்பட வேண்டும். மலஜலம் கழிக்குமிடங்களின் சுவர்கள் மேல் பாகங்கள், தடுப்புச் சுவர்கள் எல்லாம் 4 மாதங்களுக்கு ஒரு முறையாவது சுண்ணாம்பு அல்லது கலர் வாஷ் செய்யப்பட வேண்டும். இவ்விதம் செய்யப்பட்டதை ஃமூறு 7ன் படி உள்ள ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். வழவழப்பான சுவர்களுக்கு இது தேவையில்லை. அவைகள் கிருமிநாசிகளால் அலம்பி விடப்பட்டால் போதும்.

சாக்கடைகள் சிமிண்டு முதலியவைகளால் கட்டப்பட்டு கழுவி விட வாட்டத்துடன் இருக்க வேண்டும். பொது சாக்கடைகளில் போய் விழும்படி பொருந்தப் பட்டிருக்க வேண்டும். இச்சாக்கடைகள் அடிக்கடி கழுவி விடப்பட வேண்டும்.

மல ஜலம் கழிக்குமிடங்களில் ஜலம் எடுத்துக் கழுவத் தேவையான குழாய் வசதி இருக்க வேண்டும்.

ஒவ்வொரு தொழிற் சாலைகளிலும் இன்ஸ்பெக்டரின் அபிப்பிராயப்படி தேவையான 'ஸ்பிடூன்'கள் அதாவது எச்சில் துப்பும் இடங்கள் இருக்க வேண்டும். இவைகளும் தினசரி சுத்தம் செய்யப்பட்டு வைக்க வேண்டும்.

## பந்தோபஸ்து.

யந்திரங்கள் அடைப்புக்குள் இருக்கவேண்டும்: ஒவ்வொரு தொழிற்சாலையிலும் கீழே கண்ட யந்திரங்களும் அவைகளின் பாகங்களும் உறுதியான அடைப்புக்குள் பந்தோபஸ்தாக வைக்கப்பட்டிருக்க வேண்டும். அவை யாவன:—இன்ஜின் இருக்கும் இடத்திலேயே இருந்தாலும் வேறு இடத்திலிருந்தாலும். அந்த யந்திரத்தின் பிரதான அசை சக்கிரங்கள் (Prime mover) அத்துடன் இணைக்கப்பட்ட பிளைவீல்கள் (Flywheel); நீர் சக்கிரம் (water wheel) நீர் குழாய் (Turbine) இவைகளின் தலைபாகம் (Headrace) அடி பாகம் (Tail race); லேத்தின் (Lathe) இணைப்பு பாகங்கள்; எலெக்ட்ரிக் ஜெனரேடர்கள்; மோட்டார்கள்; ரோடரி கன்வர்டார்; விசை எடுத்துச் செல்லும் பாகங்கள்; மற்ற அபாயகரமான யந்திரபாகங்கள்—இவைகள் பந்தோபஸ்தான அடைப்புக்குள் வைக்கப்பட்டிருக்கவேண்டும். மேலும் சில குறிப்பிட்ட யந்திரங்கள் சம்பந்தப்பட்ட வரையில் விசேஷ விதிகள் இருக்கின்றன. அதாவது (1) பஞ்சாலைகள் (2) பருத்தி ஜின்னிங் தொழிற்சாலைகள் (3) மரவேலை யந்திரங்கள் (4) ரப்பர் மில்கள் (5] அச்சாபீசுகள்; கனல் ஆலைகள்; தேயிலை தொழிற்சாலைகள்; கல் ஒடு வேலைகள்; கடலை உடைக்கும் தொழிற்சாலைகள்-இந்திரங்களைப் பற்றி விதி 53ல் விவரமான ஷரத்துக்கள் இருக்கின்றன.

செக்ஷன் 21-41 விதிகள் 53-61

ஓடும் யந்திரங்கள்:—அபாயகரமான யந்திரங்கள் ஓடிக்கொண்டிருக்கும் போது, அவைகளைப் பொருந்த வைப்பது எண்ணெய்போடுவது, பாகங்களை மாட்டுவது முதலிய வேலைகளை இதற்காகப் பயிற்சி பெற்ற ஒரு தொழிலாளர் தான் செய்யலாம்; அவர் அவ்வேலை செய்யும் போது இறுக்கிக் கட்டிய ஆடைகளைத்தான் அணிந்திருக்கவேண்டும், மேலும் அவர் வேலை செய்யும் விபரத்தை இதற்காக வைக்கப்பட்டிருக்கும் ஒரு ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் ஓடிக் கொண்டிருக்கும் யந்திரத்தை சுத்தம் செய்யவோ, எண்ணெய் போடவோ, பொருந்தவைக்கவோ, அல்லது ஓடும் யந்திரபாகங்களிடையே எவ்வித வேலை செய்யவோ ஒரு ஸ்திரீயாவது குழந்தையாவது அனுமதிக்கப்படக்கூடாது. மேலும் ஓடும் யந்திரங்கள் சிலவற்றில் வேறு எவரும் கூட மேற்கண்ட வேலைகளைச் செய்யக் கூடாதென்று தடுக்க ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரமுண்டு.

மேலும் ராஜ்ய சர்க்காரால் குறிப்பிடப்படும் சிற்சில யந்திரங்களில் ஒரு சிறுவர் வேலை செய்வதாக இருந்தால், அவ்வி தயந்திரத்தில் அச்சிறுவருக்கு பயிர்ச்சி அளிக்கப்பட்டு, வேலை செய்யும் போது அந்த யந்திரத்தைப்பற்றிய விவரங்கள் நன்ருகத் தெரிந்து அனுபவமுள்ள ஒருவரின் மேல் பார்வையின் கீழ்தான் அச்சிறுவர் வேலை செய்யக்கூடும். மேலும், அந்த யந்திரத்தினுல் ஏற்படக்கூடிய அபாயங்கள் எவை என்றும் முன் ஜாக்கிரதைக்கான ஏற்பாடுகள் எவை என்றும் அச் சிறுவருக்கு நன்ருக முன் கூட்டியே சொல்லப்பட்டிருக்க வேண்டும். இவ்வித யந்திரங்கள் எவை என்று விதி 54ல் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவை யாவன:—(1) பவர் பிரஸ்கள்; மில்லிங் யந்திரங்கள் (2) குல்லடைன் யந்திரங்கள் (3) வட்டவாள் (4) பிளேடன் அச்சுயந்திரங்கள் (5) டிகார்டிகேடர் (6) ஆயில் எக்ஸ் பெல்லர். மேலும் ஒரு யந்திரத்தின் கியர் புல்லி, பெல்ட் சம்பந்தமான ஷாத்துக்கள் இருக்கின்றனு. அபாய காலங்களில் ஓடும் யந்திரங்களை நிறுத்தும் யந்திரசாதனங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இச் சட்டம் அமுலுக்கு வந்த 1-4-1949க்குப் பிறகு ஸ்தாபிக்கப்பட்ட விசையால் ஓடும் யந்திரங்களின் திருகு ஆணிகள், போல்டுகள், சாவிகள் முதலியவை அபாயம் விளைவிக்கக் கூடாத விதம் பொதிய வைக்கப்பட்டும் மூடப்பட்டும், இருக்கவேண்டும். அடிக்கடி சரிக்கட்ட வேண்டாத, பல்லுள்ள சக்கரங்கள் போலுள்ள பாகங்கள் (அவைகள் மூடப்பட்டிருந்தால் எப்படி பயமில்லாமலிருக்குமோ அந்த இடங்களில் இருந்தாலொழிய) நன்ருய் மூடப்பட்டிருக்கவேண்டும். இவ்விதமில்லாத விசையால் ஓடும் யந்திரங்களை ஒரு தொழிற்சாலைக்கு விற்பனை செய்பவர்களும், வாடகைக்கு விடுபவர்களும், அவர்கள் ஏஜண்டுகளும் குற்றம் செய்பவர் ஆவார்கள். 3 மாதம் வரை சிறை தண்டனை அல்லது ரூ. 500 வரை அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம். யந்திர உற்பத்தி செய்பவர்கள் விதி 54Aல் கண்ட யந்திரங்களை இந்த ஷரத்துக் கிணங்க செய்யவேண்டும்.

பஞ்சாலைகளில் 'காட்டன் ஓபனர்' அருகில் ஸ்திரீகளும் குழந்தைகளும் கூடாது:—

செக்ஷன் 27

பருத்தியை அமுக்க ஏற்படுத்தப்பட்டிருக்கும் தொழிற்சாலைகளில் 'காட்டன் ஓபனர்' என்ற யந்திரம் வேலை செய்து கொண்டிருக்கும் போது அந்த இடத்தில் ஸ்திரீகளும் குழந்தைகளும் வேலை செய்யக் கூடாது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் ஹயிஸ்டுகள், லிப்ட்கள், கிரேன், சுழலும் யந்திரங்கள் பிரஷர் பிளாண்ட் இவைகள் எப்படி இருக்க வேண்டுமென்று செக்ஷன்கள் 28, 29, 30, 31, விதிகள் 55, 56, இவைகளில் கூறப்பட்டிருக்கின்றன.

குளம், குழிகள் மூடப்பட்டிருக்க வேண்டும்:—

செக்ஷன் 33

ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தரை மட்டத்திற்குக் கீழே புதைக்கப்பட்டிருக்கும் பாத்திரங்கள், குழிகள், குளங்கள் இவைகள் ஆழமாக இருப்பது காரணமாகவோ இருக்கும் இடத்தின் காரணமாகவோ, அபாயம் விளைவிக்கக் கூடியதாக இருந்தால் அவைகளை நன்ருக மூடி வைக்க வேண்டும்; அல்லது நாலாபக்கங்களிலும் அடைப்பு வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

அதிகபாரம்:—

செக்ஷன் 34
விதி 57

வேறு ஒருவருடைய உதவியின்றி ஒரு ஸ்த்ரீ அல்லது சிறுவர் கீழே கண்ட பாரத்திற்கு மேல் உள்ள எந்த சாமான்களையும் எந்த ஆயுதங்களையும் தலையிலோ, கையாலோ, தூக்கவும் எடுத்துச் செல்லவும் நகர்த்தவும் கூடாது.

| | | |
|---|---|---|
| 18 வயது பூர்த்தியான ஸ்த்ரீ தனியாக தூக்கக்கூடிய பாரம் | 65 | பவுண்டு |
| 15 வயதுக்கு மேல் 18 வயது பூர்த்தியாகாத ஆண் தூக்கக் கூடிய பாரம் | 65 | ,, |
| ஷை............பெண் | 45 | ,, |
| ஆண் குழந்தை (15 வயது பூர்த்தியாகாதவர்) | 35 | ,, |
| பெண் குழந்தை (ஷை) | 30 | ,, |

ஒரு ஸ்த்ரீ அல்லது சிறுவர் வேறு ஒருவருடன் சேர்ந்து ஒரு சாமானை தூக்கினுலும், நகர்த்தினுலும், தலையில் எடுத்துச் சென்ருலும் மேலே கண்ட விதியில் குறைந்த பட்சமான கனத்தைப் போல், எத்தனை பெயர்கள் சேர்ந்து அக்காரியத்தை செய்கின்ருர்களோ அத்தனை மடங்குக்கு மேல் கனமுள்ளதாக இருக்கக் கூடாது.

(தொடரும்.)

# கேள்வியும் பதிலும்



இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் தமிழில் சுருக்கமாய் இருக்கவேண்டும். ஒவ்வொரு கேள்வியும் தனித்தனியான காகிதத்தில், பதில் எழுத இடம் விட்டு எழுதி அனுப்பவேண்டும். தவிர ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பிரதிகள் அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்வியிலும் குறிப்பிடப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களுக்கு மட்டில்தான், அதன் 'பதில்' பொருந்தும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் அபிப்பிராயமே. கேள்விகளுக்கு நேரில் பதில் அனுப்புவதும் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளுவதும் இயலாது.

ஒவ்வொரு மாதமும் முதல் தேதி முதல் 10ஆம் தேதிக்குள் அனுப்பப்படும் கேள்விகளுக்குத்தான் அடுத்த இதழில் பதில் சொல்லுவது சாதாரணமாகச் சாத்தியமாகும்.

## பஞ்சாயத்தைப் பிரிக்க வேண்டும்.

28. கேள்வி: (சந்தா நி. 936) ஒரு கிராமத்தில் நீண்ட காலமாய்ப் பஞ்சாயத்துப் போர்டு இருந்து வருகிறது. இந்தக் கிராமத்தை சுற்றிலும் சிறு சிறு பகுதிகளாக மக்கள் வசிக்கிறார்கள் இந்தச் சிறு பகுதிகளுக்கு மத்தியில் ஓர் டவுன் இருக்கிறது. இந்தக் கிராமத்தின் மொத்த ஜனத்தொகை 5000க்கு மேல் இருக்கிறார்கள். கிராமப் பஞ்சாயத்துப் போர்டு மெம்பர்களில் மைனார்டி வகுப்பு மெம்பர்கள் டவுனில் வசிக்கிறார்கள். மெம்பர்களில் பெரும் பான்மையோருக்கும், சிறுபான்மையோருக்கும் கருத்து வேற்றுமையால் டவுனில் மராமத்து இதர பஞ்சாயத்துப் போர்டு வேலைகள் தடைபடுகின்றன. ஆகையால் இப்போர்டை இரண்டாகப் பிரிக்கலாமா? பிரிக்க முடிந்தால் யாருக்கு மனுச் செய்யவேண்டும்?

பதில்: இப்பஞ்சாயத்துக் கிராமத்தில் இரண்டு அல்லது பல ரிவின்யூ கிராமங்கள் அங்கு இருந்தால்தான் பிரிக்கமுடியும். அப்படி இருந்தால்தான் குறைந்தது ஜனத்தொகை 500 உள்ள ரிவின்யூ கிராமமாவது அப்பஞ்சாயத்தில் தங்கும்படி விட்டு விட்டு, பக்க ரிவின்யூ கிராமங்களை அப்பஞ்சாயத்திலிருந்து நீக்கி விடலாம். இப்படி நீக்கப்படும் ரிவின்யூ கிராமத்தின் ஜனத்தொகை 500க்குக் குறையாமலிருந்தால் தான் அதற்கு ஒரு தனிப் பஞ்சாயத்து ஏற்படுத்தலாம். 500க்கு குறைவான ஜனத்தொகை உள்ள ரிவின்யூ கிராமத்தை வேறு பஞ்சாயத்துடன் சேர்க்கத்தான் அதிகாரம். இவ்விதம் செய்ய அதிகாரமுள்ளவர் இன்ஸ்பெக்டர் (Inspector of Municipal Councils and Local Boards) என்ற அதிகாரி. அவருக்குத்தான் இது விஷயமாக பக்கள் மனுப் போடவேண்டும். (பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 3)

## பஞ்சாயத்து ஆபீசு

29. கேள்வி: (ஷை) ஒரு மைனர் பஞ்சாயத்துப் போர்டுக்கு ஆபீஸ் (Office) கட்டிடம் கிடையாது. அந்த ஊரின் சிறு சிறு பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் தங்கள் சிறு பகுதிகளில் பஞ்சாயத்துப் போர்டுக்கு இனமாக ஆபீஸ் கட்டித் தருவதாக சொல்லுகிறார்கள். டவுனாக உள்ள இடத்தில் ஆபீஸ் கட்டிடம் இனமாகக் கட்டிக்கொடுக்க டவுன் மக்கள் சம்மதிக்கவில்லை. ஆனால் டவுனில்தான் கட்டிடம் பஞ்சாயத்துப்

போர்டால் கட்ட வேண்டுமென்று டவுன் மக்கள் விரும்புகிறார்கள். அவ்வாறு கட்டமுடியுமா?

பதில்: பஞ்சாயத்தே ஒரு சொந்தக் கட்டடத்தைக் கட்டிக் கொள்ளலாம். அல்லது வாடகை கொடுத்து ஒரு கட்டிடத்தில் ஆபீஸ் நடத்தலாம். இனம் கட்டிடத்தில்தான் ஆபீஸ் நடத்த வேண்டுமென்ற கட்டாயமில்லை.

## பாகப்பிரிவினைக்கு பிறகும், சொத்தை விற்கத்தடை—ஷரத்து செல்லுமா?

30. கேள்வி: (சீனுவாசன்—ஸ்ரீ முஷ்ணம்) சகோதரர்கள் தங்களுக்குள் பாகம் பிரித்துக் கொள்ளும் போது தங்களுடைய பாகத்தை அன்னியரிடம் ஒருவரும் விற்க கூடாது என்றும் விற்கும்படி நேரிட்டால் மற்ற பாகஸ்தர்களும் சாட்சி போட வேண்டும் என்றும் பாகப் பிரிவினைப் பத்திரத்தில் எழுதிக்கொண்டார்கள். பிறகு அவர்கள் தங்கள் பாகங்களை அன்னியரிடம் விற்கலாமா? விற்றால் செல்லுமா?

பதில்: மேற்கண்ட விதம் விற்பனையைத் தடுக்கும் ஷரத்து செல்லாது. இந்த ஷரத்து இருந்தாலும், பாகஸ்தர்கள் தங்கள் பாகத்தை விற்கலாம். விற்றால் செல்லும். (50 லா வீக்லி 254 என்ற வழக்கில் ஏற்பட்டிருக்கும் தீர்ப்பைக் கவனிக்கவும்.) இந்த ஷரத்து அன்னியர்களுக்கு விற்பனை செய்வதைத் தடை செய்கிறதே ஒழிய மற்ற பாகஸ்தர்கள் அதை வாங்கிக் கொள்ளக் கடமைப் பட்டவர்கள் என்று இல்லாததினால் இந்த ஷரத்து செல்லாது.

## புதிய கடன் ஒத்திவைப்புச்சட்டம்

31. கேள்வி: சுப்பிரமணியம் — வாங்கல்) ஒருவர் கொடுக்க வேண்டிய வீட்டு வாடகை பாக்கிக்காக அவர் மீது கோர்ட்டில் தாவா போட்டால், அவர் தாம் விவசாயி என்றும் ஒரு வருடம் வாய்தா வேண்டுமென்றும் கேட்டால் அது சட்டப்படி செல்லுமா?

பதில்: புதிதாக வந்திருக்கும் 1954-ம் வருடத்திய சென்னைக் கடன் பட்ட விவசாயிகள் தாற்காலிகப் பரிகாரச் சட்டத்தினால் வீட்டு வாடகைப் பாக்கிக்குத் தாவா செய்ய யாதொரு தடையுமில்லை. அச் சட்டத்தில் 'கடன்' என்பதற்கு அர்த்தம் சொல்லுகையில், வீட்டு வாடகை அதில் சேர்ந்ததல்ல என்று சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் வீட்டு வாடகை பாக்கிக்குத் தாவா செய்யலாம்.

## இந்துச் சட்டம்—வைப்பு மகனின் மகன்—வார்சு பாத்தியம்

32. கேள்வி: (பிரகத் சுந்தராம்பாள்.) பிராமணரல்லாத இந்து ஒருவர் சுமார் 40 வருடங்களுக்கு முன் இறந்தார். அவர் இறக்கும் முன்பே அவருடைய ஒரே ஆண் மகன் ஒரு விதவையை வைத்து விட்டு இறந்து போனார். இந்து இறக்கும்போது அவருடைய மனைவியும், அவருடைய வைப்பு மனைவியும், வைப்பு மனைவியின் ஆண் மகனும் இருந்தனர். இந்து இறந்த 10 வருடங்களுக்குப் பின் வைப்பு மனைவி இறந்தாள். பிறகு வைப்பு மனைவியின் ஆண் மகன் இறந்தார். அவருக்கு இரண்டு ஆண் மக்கள் உண்டு. 40 வருடங்களுக்கு முன் இறந்த இந்துவின் மனைவி சமீபத்தில் இறந்தாள். இந்துவுக்கு முன்பே இறந்த மகனின் விதவை ஜீவனாம்சம் வாங்கிக்கொண்டிருக்கிறாள். இறந்தவருக்குப் பங்காளிகளும் இருக்கின்றனர். இறந்த இந்துவின் சொத்துக்களுக்கு யார் வார்சுகள்? அவர்களுக்குப் பங்கு வீதம் என்ன?

பதில்: இந்துச் சட்டப்படி பிராமண, க்ஷத்திரிய, வைசியர்களுடைய வைப்பு மனைவி மகன்களுக்கு வார்சுபாத்தியமே கிடையாது. மற்ற இந்துக்களுடைய வைப்பு மனைவி மகன்களுக்குத் தகப்பன் சொத்தில் வார்சுரிமை உண்டு. ஆனால் எவ்விதமான வைப்பு மனைவியின் மகன்களுக்குத்தான் வார்சு பாத்தியம் உண்டு என்பதைப்பற்றி சில நிபந்தனைகள் இருக்கின்றன. அவ்விதமிருக்கும் வைப்பு மனைவிகளுக்குப் பிறக்கும் ஆண் மக்களுக்குத் தகப்பன் சொத்தில் வார்சு பாத்தியம் உண்டு. அவ்வித வைப்பு மகன் தகப்பனுக்கு முன்பே இறந்துபோய் விட்டாலும், வைப்பு மகனின் ஆண் மக்களுக்கும் வார்சு பாத்தியம் உண்டு. தகப்பன் இறக்கும்போது அவருக்குச் சொந்த மனைவியோ, மகனோ, மகளோ, அல்லது மகளின் மகனோ ஒருவருமில்லாமல், வைப்பு மகன் மட்டிலிருந்தால், தகப்பனுடைய சொத்துகள் பூராவுக்கும் வைப்பு மகனே தான் வார்சு. இவர்களில் யார் இருந்தாலும் வைப்பு மகனுக்குப் பாத்தியம் குறையும். அதாவது சொந்த மனைவியின் மகனாக இருந்தால் அவருக்கு என்ன வீதம் கிடைக்குமோ அதில் பாதி பாத்தியம் தான் வைப்பு மகனுக்கு உண்டு. கேள்வியிலிருக்கும் தகப்பனுக்கு சொந்த மனைவியும் வைப்பு மகனும் இருந்தபடியால், வைப்பு மகனுக்குத் தகப்பன் சொத்தில் சரி பாதி உண்டு. வைப்பு மகன் இறந்தாலும் இப்பாத்தியம் அவருடைய ஆண் மக்களுக்கு உண்டு. மற்ற பாதியை இறந்த இந்துவின் மனைவி ஆயுள் வரை அவள் அனுபவித்து அவள் இறந்த பிறகு அப்பாதி சொத்தானது இந்துச் சட்டப்படிக்கான நெருங்கிய பங்காளிகளைச் சேரும்.

## செட்டில் மெண்டை ரத்து செய்யலாமா?

**33. கேள்வி:** (நைனர் பிள்ளை—சாத்தூர்.) ஒரு இந்து ஆண், தன்னுடைய மனைவியின் சகோதரிக்கும் ஷியார் கணவருக்கும் சேர்த்து ஒரு சொத்தைக்காட்டி அவர்கள் இருவர் ஆயுள் வரை எவ்வித வில்லங்கமும் செய்யாது அவர்கள் அனுபவித்துக் கொண்டு, இருவர்களுடைய ஆயுளுக்குப்பின், எழுதி வைத்தவருடைய மனைவி அச்சொத்தைச் சர்வ சுதந்தரமாக அடைவதென்றும் இதை ரத்து செய்யத் தமக்கு அதிகாரம் இல்லை என்றும் 1951 ல் ஒரு செட்டில்மெண்ட் எழுதி வைக்கிறார். பிறகு 1952ல் எழுதி வாங்கிய இருவரும் செட்டில் மெண்ட் பாத்தியதையை விடுதலை கொடுத்து விடுகிறார்கள். விடுதலைக்குச் சில நாட்கள் கழித்து, எழுதி வைத்தவர் மேற்கண்ட இருவர்களுக்கும் அச்சொத்தை நன்கொடையாகக் கொடுத்து விடுகிறார். எழுதிக் கொடுத்தவர் மனைவி இதில் சம்பந்தப் படவில்லை. இவளுக்குச் செட்டில்மெண்ட்டு பாத்தியதை உண்டா இல்லையா?

**பதில்:** மனைவி சம்பந்தப்பட்ட வரையில் செட்டில்மெண்டை ரத்து செய்வது செல்லாது.

## 14-10-1947ல் ஏற்பட்ட ஒத்தி-வட்டிக் கழிவு உண்டா?

**34. கேள்வி:** (பாலய நாடார்—மதுரை) 1947-ம் வருடம் அக்டோபர் மாதம் 14-ம் தேதி ஒத்திப்பத்திரம் எழுதப் பட்டதற்கு விவசாயச் சட்டப்படி வட்டிக் கழிவு உண்டா?

**பதில்:** இல்லை. 30-9-1947-க்கு முன்பு ஏற்பட்ட ஒத்திகளுக்குத் தான் அச்சட்டத்தின் செக்ஷன் 9A-ன் படி கழிவு ஏற்படும்.

## இரண்டு மனைவிகள்—கணவன் சொத்தை ஒருவர் பராதீனம் செய்யலாமா?

**35. கேள்வி:** (வெங்கடேசுவரய்யர்—ஆத்தூர்) இறந்து போன இந்து ஒருவருக்கு இரண்டு மனைவிகள். ஆண்சந்ததி இல்லை. மூத்த மனைவிக்கு மூன்று பெண்கள். இளையவளுக்கு ஒரு பெண். இரு மனைவிகளும் கணவருடைய சொத்துக்களைப் பாகம் செய்து கொண்டார்கள். இளைய மனைவி அச்சொத்துக்களைப் பராதீனப் படுத்தி அத்தொகையிலிருந்து தன் பெயருக்கு வேறு சொத்து வாங்கிக்கொண்டு அச்சொத்தைத் தன்னுடைய ஒரே மகள் சர்வ சுதந்தரமாக அடையும்படி உயில் எழுதி வைத்தால், உயில், செல்லுமா?

**பதில்:** இளைய மனைவி செய்த பராதீனமே செல்லாது. கணவனுடைய சொத்தை வாரசு முறைமையில் அனுபவிக்கும் விதவை அச்சொத்துக்களைக் குறித்து உயில் எழுதினாலும் செல்லாது.

## அங்கத்தினர்களுக்கு விற்பனை செய்யும் வியாபாரிகளின் யூனியன்—விற்பனை வரி கொடுக்கவேண்டுமா?

**36. கேள்வி:** (செல்லையா ஆசாரி—மதுரை) ஏற்கனவே வியாபாரிகளாக இருந்தும் விற்பனை வரி செலுத்தியும் வருகிற சில வியாபாரிகள் ஒரு யூனியனாகச் சேர்ந்து வேறு மொத்த வியாபாரிகளிடம் மொத்தமாகச் சாக்குகளை யூனியன் பெயருக்கு வாங்கி, அந்த யூனியன் அங்கத்தினர்கள் பிரித்து எடுத்துக் கொண்டு, அவரவர்கள் சில்லரை விற்பனை செய்து கொண்டால், நடுவிலுள்ள யூனியன் பெயருக்கும் விற்பனை வரி செலுத்த வேண்டுமா?

**பதில்:** யூனியனும் விற்பனை வரி செலுத்த வேண்டும். விற்பனை வரிச் சட்டத்தில் செக்ஷன் 2 (b) என்ற ஷரத்தில் 'வியாபாரி' (Dealer) என்பதற்கு அர்த்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதன்படி அங்கத்தினர்களுக்கு விற்பனை செய்யும் சங்கங்களும் 'வியாபாரி' தான்.

## பஞ்சாயத்து லைசென்சு

**37. கேள்வி:** (முகமது காசிம்—முதுகுளத்தூர்) ஒரு வியாபாரி பல சரக்கு வியாபாரம் செய்கிறார். அவர் ஒரே கட்டடத்தில் பல சரக்கு உணவு தானியங்கள், மண்ணெண்ணெய் வைத்து விற்பனை செய்கிறார். பஞ்சாயத்துச் சட்டப்படி ஒவ்வொரு பொருளுக்கும் லைசென்சு வாங்க வேண்டுமா? அதாவது (1) பலசரக்கு, (2) உணவு தானியங்கள் (3) மண்ணெண்ணெய் இவை ஒவ்வொன்றுக்கும் தனித்தனியாக மூன்று கட்டணங்கள் கட்டி மூன்று லைசென்சுகள் வாங்க வேண்டுமா? அல்லது ஒரே லைசென்சு வாங்கினால் போதுமா?

**பதில்:** ஒவ்வொன்றுக்கும் தனித் தனியாக லைசென்சு வாங்கிக் கொள்ள வேண்டுமென்று பஞ்சாயத்துச் சட்டத்தில் கட்டாயம் ஒன்றுமில்லை.

## விற்பனை வரிச் சட்டம்—நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தியாளர் ரூ. 6 கட்ட வேண்டுமா?

**38. கேள்வி:** (சிதம்பரம் செட்டியார்—புதுக் கோட்டை.) நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்திக்கு விற்பனை வரி இல்லை என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் விற்பனை

வரி அதிகாரிகள் செக்கு ஒன்றுக்கு ரூ. 6 வரி கட்டவேண்டு மென்று சொல்லுகிறார்கள். வரி செலுத்த வேண்டுமா?

**பதில்:** ரூ. 6 கட்டி லைசென்சு வாங்கிக் கொண்ட நாட்டுச் செக்கு எண்ணெய் உற்பத்தி யாளர்களுக்குத் தான் விற்பனை வரி கொடுக்க வேண்டியதில்லை என்று விதி விலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது. லைசென்சு வாங்கிக் கொள்ளாத எண்ணெய் உற்பத்தியாளர்கள் மற்ற எல்லா வியாபாரிகளைப் போல் விற்பனை வரி கட்ட வேண்டும்.

## காது கேட்காதவர்களுக்கு மோட்டார் ஓட்ட லைசென்சு கிடைக்குமா?

**39. கேள்வி:** (லகுமய்யா — சின்னாளப்பட்டி) ஒரு மோட்டார்காரை நன்றாக ஓட்டும் அளவுக் குப் பழக்கமாகி இருக்கும் ஒருவருக்குக் காது செவிடு. இந்த நிலையில் அவருக்கு மோட்டார் ஓட்ட லைசென்சு கிடைக்குமா? அல்லது காதக் கருவி வைத்துக் கொண்டால் லைசென்சு கிடைக் குமா?

**பதில்:** காது செவிடாக இருப்பவர்களுக்கு மோட்டார் ஓட்ட லைசென்சு கொடுக்கப்பட மாட்டாது. மோட்டார் சட்டத்தின் இரண்டா வது ஷெடியூலில் ஒரு ஜாப்தா கொடுக்கப்பட் டிருக்கிறது. அதாவது எந்த எந்த வியாதிகள் அல்லது குறைபாடுகள் இருப்பவர்களுக்கு மோட்டார் வண்டி ஓட்டும் லைசென்சு கொடுக்கக் கூடாதென்று இதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. யாதொரு கருவியின் உதவியுமில்லாமல் சாதா ரணமான சப்த சின்னங்கள் (Ordinary Sound Signals) காதில் விழாத அளவுக்கு ஒருவருக்குக் காது கேட்கவில்லை என்றால் அவர் மோட்டார் ஓட்ட லைசென்சு வாங்கமுடி யாது. (மோட்டார் சட்டம் செக்ஷன் 7 (5).)

## விற்பனைவரி அதிகாரி எந்தெந்த நேரங்களில் சோதனை செய்யலாம்?

**40. கேள்வி:** (வையாபுரி உடையார்— துறையூர்.) ஒரு விற்பனை வரி ஆபீசர் ஒரு விற்பனை ஸ்தாபனத்தை எந்த எந்த நேரங்களில் தணிக்கை செய்ய அதிகாரமுண்டு? குறிப்பிட்ட நேரத்தைத் தவிர மற்றைய நேரங்களில் பார்வையிட வந்தால் அவர் மீது தாவா செய்ய லாமா?

**பதில்:** விற்பனை வரிச் சட்டத்தின் செக் ஷன் 14 (2)-ன் படி சோதனை செய்ய அதிகார முள்ள விற்பனை வரி அதிகாரிகள் விற்பனை ஸ்தலத்தை எந்த 'நியாயமான நேரங்களிலும்' (At All Reasonable times) சோதனை செய்ய லாம்-என்று இருக்கிறது. எது 'நியாயமான நேரம்' என்பது அந்தந்த இடங்களையும் சந்தர்ப் பங்களையும் பொறுத்தது. சோதனைக்காகச் சட்டத்தில் யாதொரு மணிநேரமும் குறிப்பிடப் படவில்லை. மேலும் வியாபாரி குறிப்பிடும் நேரத்தில் தான் அதிகாரிகள் சோதனை செய்ய வேண்டு மென்பது மில்லை. தவிர நல்லெண்ணத் துடன், அதாவது தம் கடமையைச் செய்யும் ஒரு விற்பனை வரி அதிகாரியானவர் 'இது தான் இக்கடையைச் சோதனை செய்ய நியாயமான நேரம்' என்று உண்மையில் எண்ணித் தம் சோதனையை நடத்தினால் விற்பனை வரிச் சட்டத் தின் செக்ஷன் 17 (2) என்ற ஷரத்தானது அவருக்கு ஒரு பாதுகாப்பு அளிக்கின்றது. அவர் சோதனை செய்தது நியாயமான நேரமல்ல என்று பிறகு ஏற்பட்டாலும், அவர் மீது எவரும் எவ்வித சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கை யும் தொடர முடியாது. அநேகமாகச் சர்க்கார் அதிகாரிகள் யாவருக்கும் இவ்விதப் பாதுகாப்புப் பொதுவாக இருக்கிறது. இது இல்லா விட்டால் சர்க்கார் நடத்த முடியாது.

**41. கேள்வி:** (ஷை) ஒரு வியாபாரியைப் பார்த்து, பிறருடைய வீட்டைச் சந்தேகப்பட்டுச் சோதனை செய்ய வேண்டுமென்று விற்பனை வரி ஆபீசர் கேட்டால், அதற்குத் திறந்துவிட வேண்டுமா? காரணம் என்ன?

**பதில்:** ஒரு வியாபாரி தம்முடைய சரக்கு களை எங்கே எங்கே வைத்திருக்கிறாரோ அந்த இடங்களை எல்லாம் சோதனை செய்ய விற்பனை வரி அதிகாரிகளுக்கு உரிமை உண்டு. சட்டம் அப்படி இல்லாவிட்டால் சர்க்காரை ஏமாற்றும் எண்ணமுள்ள வியாபாரிகள் தங்களுடைய சரக்குகளை வெவ்வேறு இடங்களில் பதுக்கி விடுவார்கள்—என்பதுதான் இச்சட்ட விதிக்குக் காரணம்.

**42. கேள்வி:** (P. 3286-சாம்பசிவம் பிள்ளை வீரபெருமா நல்லூர்) புருஷன் மனைவி இருவர் இவர்களில் புருஷன் காலமாய் 4 வருஷத்துக் குப் பின் மனைவியும் காலமாய்விட்டனர். மனைவி யின் தாயார் மூலம் கிடைத்த மனைவியின் பெயரில் உள்ள நிலங்கள் இருக்கின்றன. காலம் சென்ற மனைவிக்கு ஆண் சந்ததி இல்லை. பெண் சந்ததி மூவர். எல்லோருக்கும் விவாகம் நடந்தாய்விட்டது. மூவரில் முதல் பெண்ணுக்குப் பெண் உண்டு. மூத்த பெண்ணும் காலமாய் விட்டனர். இப்போது இருப்பது முதல் கால மான மனைவியின் இரண்டு குமாரத்திகளும் இரண்டாவதுகாலம் சென்ற மூத்த மகளின் பேத்தியாகிய மகளும் இருக்கின்றனர்கள். இப்போதிருக்கும் சொத்து இரண்டு குமாரத்தி

களுக்கு மட்டுமா பேத்திகளும் சேர்ந்து மூன்று பாகமா?

**பதில்:** தாயார் இறக்கும் போதிருக்கும் இரண்டு மகள்களுக்கு மட்டில் தான் சொத்துக் கிடைக்கும். பேத்திக்கு வார்சு பாத்தியம் இல்லே.

## ஆண் சந்ததியில்லாத இந்துவின் சொத்து.

**43. கேள்வி:** (சின்னுசாமி. ச. புதூர் நாமக்கல்) மூல புருஷனும் (ஹிந்து) அவன் ஒரே ஆண் சந்ததியும் காலமாகி, மனேவி உயிருடனிருந்து, அவளுடைய பெண் சந்ததிகளுக்கு கல்யாணமாகி அவர்களுக்கு ஆண் பெண் குழந்தைகள் இருந்தால் சொத்துக்கள் சட்டப்படி யாருக்குச் சேரும். ஷை சொத்துக்களே விற்க மனேவிக்கு அதிகாரம் உண்டா?

**பதில்:** சொத்துக்களே மனேவி உள்ளவரையில் அனுபவிப்பாள். சாதாரணமாய்ச் சொத்துக்களே விற்க மனேவிக்குப் பாத்தியமில்லே. ஆனுல் சில அவசியமான காரணங்கள் இருந்தால் அவள் விற்கலாம். அவளுக்குப் பின் சொத்து பேரன்களுக்குப் போகும்.

## பிரிபடாத இந்துக் குடும்பம் ஆண் சந்ததி இல்லே. வார்சுபாத்தியம்

**44. கேள்வி:** (ராமசாமி அய்யர்—நீடாமங்கலம்.)





# சுல்தானியா படைமருந்து

இது 38 வருடங்களாக இந்தியா, பர்மா, சிலோன், மலேயா, இந்தோ - சைனு முதலிய நாடுகளில் கோடிக்கணக்கான மக்களுக்கு நிவாரணமளித்து நற்கியாதியுடன் தங்க மெடல்களும் நற்சாட்சிப் பத்திரங்களும் பெற்றது.

எல்லாவித படை, சொறிசிறங்கு, கக்கூஸ் பத்து, அரிப்பு, வண்டுகடி, புழுக்கடி, எச்சிற்றழும்பு, கருநிறமுள்ள தடிப்பு, மேகப்படை முதலிய தோல் வியாதிகளே உடனே குணப்படுத்தும்.

பெரிய சைஸ் பாட்டில் ஒன்று அணு 12.
சிறிய ,, ,, ,, அணு 6.

எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:— ஜெயரசம் டிப்போ, அய்யம்பேட்டை, S. Ry.

சென்னேயில் ஸ்டாக்கிஸ்ட்:—

E. A. N. அப்துல் லத்தீபு அன் கோ

1 & 2, அண்ணு பிள்ளே தெரு, கோத்தவால்சாவடி; :: மதராஸ்–1

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
7729

பிரிபடாத இந்துக் குடும்பத்தில் இரண்டு சகோதரர்கள் இருந்தார்கள். மூத்தவர் இறந்து 15 வருடங்களாகின்றன. அவருக்கு ஆண் மகன் இல்லை; ஒரு பெண்மகள் இருந்து அவளும் இறந்துபோய்விட்டாள். அப் பெண் மகளுடைய மகனும் மகளும் இருக்கின்றனர். இளைய சகோதரரும் யாதொரு சந்ததியுமின்றி இப்போது இறந்துவிட்டார். அச் சகோதரர்களுடைய சகோதரியும் அச் சகோதரியின் இரண்டு ஆண் மக்களும் இருக்கின்றனர். இறந்த சகோதரர்களுடைய சொத்துக்களுக்கு யார் வாரிசு? மூத்த சகோதரரின் பேரனா, அல்லது சகோதரியா, அல்லது சகோதரியின் ஆண் மக்களா?

**பதில்:** சகோதரிதான் வாரிசு. அவள் ஆயுள் வரை சொத்துக்களை அனுபவிக்கலாம். பிறகு அவளுடைய ஆண் மக்கள் வார்சாவார்கள். குடும்பம் பிரிபடாமல் இருந்ததால், மூத்த சகோதரர் இறந்தவுடன் எல்லாச் சொத்துக்களுக்கும் இளைய சகோதரரே தனி உரிமை உள்ளவராகிவிட்டார். அவர் இறந்த பிறகு அவருக்கு நெருங்கிய வாரிசு சகோதரிதான். பிரிபட்ட குடும்பமாக இருந்தால், மூத்த சகோதரருடைய பாகம் அவர் இறந்தவுடன் அவருடைய பேரனுக்குத்தான் போகும்.

## கடன் ஒத்திவைப்புச் சட்டம்

45. **கேள்வி:** (ஜலீல்-உடுமலைப் பேட்டை) கிராமங்களில் வியாபாரம் செய்யும் சின்ன வியாபாரிகளுக்கு வியாபாரச் சார்பில் சாக்குக் கடன் கொடுத்த வகையில் ஏற்பட்ட பாக்கிகளை கோர்ட்டில் தாவா செய்து வசூலிக்கக் கடன் ஒத்திவைப்புச் சட்டம் பாதிக்குமா?

**பதில்:** அச்சின்ன வியாபாரியானவர் ‘விவசாயி’ ஆக இருந்தால் புதிய சட்டப்படி அவர் மீது ஒரு வருடத்திற்குத் தாவா போட முடியாது.



## அன்பர்களுக்கு ஓர் அறிவிப்பு.

மக்களுக்கு வேண்டியது மூன்று சுத்தம் அதாவது, மனம், வாக்கு, காயம். அதிலே பிரதானம் காயசுத்தி. காயசுத்தி இல்லாமல் எந்த மனிதனும் அதாவது பாட்டாளி முதல் - பணக்காரர் வரையிலும் (சிறிய உத்தியோகஸ்தர் முதல் பெரிய ஆபீஸர் வரையில்) அவரவர்கள் வேலையை சரிவர கவனிக்க இயலாது என்பது மறுக்கமுடியாத உண்மை. ஆகவே அதற்காகச் செய்யப்பட்ட அற்புத மருந்து.

ரிஜிஸ்டர் நெ. 138512

## ‘ஜெயராம்’ காயசுத்தி லேகியம்

குடல், இரைப்பை கோளாறுகளாகிய தீராத வயிற்றுவலி, ஓயாத வாந்தி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம், செஞ்சு, முதுகு, இடுப்புவலி, கிருமிகளின் உபாதை, மூலநோய், நாள்பட்ட மலசசிக்கல் முதலியவைகளைப் போக்கி ஜீரண சக்தியைக் கொடுத்து உடலுக்குப் புதிய சக்தியை அளிக்கும். இரண்டே வேளையில் ஆச்சரியயான குணம் தெரியும். போலிகள் அதிகம் இருப்பதால் மேலே கண்ட ரிஜிஸ்டர் நெ. 138512-ஐ கவனித்து வாங்கவும்.

1 சேர் விலை ரூ. 4—8—0    ½ சேர் விலை ரூ. 2—4—0    வி. பி. பி. தனி.

தயாரிக்குமிடம்:—

**G. ஜெயராம் வைத்தியசாலை, 28, காசிவிஸ்வநாதர் கீழவீதி, கும்பகோணம்.**

குடல், இரைப்பை கோளாறுகளுக்கு ஆப்ரேஷன் தேவையில்லை.

PRINTED BY N. RAMARATNAM, M.A., B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUVIDAIMARUDUR AND PUBLISHED BY, R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. *Editor:*—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.




மேனி அழகு மட்டும் இருந்தால போதாது!
ஆடை அழகும் வேண்டும்!
ஆடை அழகு பெற
—: அறந்தாங்கி :—

**786 சங்கு சோப்பை**

வாங்கி உபயோகியுங்கள்
கட்டி 1-க்கு அணு 0-1-3தான்




தயாரிப்பவர்:–
இ. கா. ரு. மு. காதர் நயினு முகம்மது,
786 சங்கு சோப் ஒர்க்ஸ், அறந்தாங்கி S. Ry.





"**வக்கீல்**" பத்திரிகை ஒவ்வொரு ஆங்கில மாதம் முதல் வாரத்தில் பிரசுரம் செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு சந்தாதாருடைய விலாசமும் சரிபார்த்து அனுப்பப் படுவதால் தபால் மூலம் அனுப்பப்படும் பத்திரிகை 10 தேதிக்குள் உங்களிடம் கிடைக்கா விட்டால், உடனே "வக்கீல்" காரியாலயத்திற்கு ஒரு கார்டு எழுதவும். சந்தா நம்பரையும் விலாசத்தையும் புரியும்படி எழுதவும். சந்தா முடிந்தவர்கள் புதிய சந்தா அனுப்பிய பிறகே அவர்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படும். வெளிநாட்டிலிருக்கும் சந்தாதாரர்கள் சந்தாத் தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் ஏர்மெயிலில் ரிஜிஸ்டர்செய்து அனுப்ப லாம். சந்தா விபரமும், விளம்பர விகிதமும் முன் அட்டைப் பக்கத்தில் இருப்பதைக் கவனிக்கவும்.

Regd. No. M. 5399 "THE VAKIL" March 1954

V. S. & Sons

**SWEETS**

குணத்திலும்
மணத்திலும்
நிகரற்றது

வி. எஸ். & ஸன்ஸ்

பெப்பர்மெண்டுகள்

*

தயாரிப்பவர்கள் :

தென் இந்திய பெப்பர்மெண்டு தொழிற்சாலை,

கும்பகோணம்.

(Estd. 1925)